Registered as a Newspaper

NEW MASTER INSTITUTE
B.M.C. Lane, Jaffna.
89 A/L Day Classes
துரித மீட்டல் வகுப்புகள் நடைபெறுகின்றன
7.30 — Zoology
8.30 — Chemistry
9.30 — Physics
10.30 — Chemistry
11.30 — Botany
12.30 — Zoology
8.00—12.30 —
Pure & Applied Maths

# உதயன்

விலை ரூ 2/50

NEW MASTER INSTITUTE
B. M. C Lane, Jaffna.
89 A/L
DAY
CHEMISTRY CLASS
(Mon — FRI)
ஆசிரியர் :
★ திரு. பாபு ★
ஆரம்பம்: 01-09-89
வெள்ளி காலை 10-30
(ஆரம்ப வகுப்பு நாவலர் வீதியில் உள்ள New Master Institute இல் நடைபெறும்)

சுடர்: 4 சுக்கில ஞுஆவணி மீ 14 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1410 முஹர்றம் பிறை 27 (30 - 08 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 230

# அடையாளக் கார்ட்டுகளை துரிதமாக வழங்க ஏற்பாடு

## தொலைத்தவர்களுக்கு உதவும் வகையில் ஆட்பதிவுத் திணைக்களம் நடவடிக்கை

கொழும்பு, ஆகஸ்ட் 30

தமது அடையாளக் கார்ட்டுகளைத் தொலைத்துவிட்டுக் கஷ்டப்படும் மக்களுக்கு உதவும் பொருட்டு, ஆட்பதிவுத் திணைக்களம் புதிய அடையாளக் கார்ட்டுகளைத் துரிதமாக வழங்க ஏற்பாடு செய்து வருகிறது.

காணாமற்போன அடையாளக் கார்ட்டுகளுக்குப் பதிலாகப் புதிய கார்ட்டுகளை வழங்கும் நடைமுறைகளைத் துரிதப்படுத்த ஒழுங்குகள் செய்யப்பட்டு வருவதாகத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அடையாளக் கார்ட் இப்போது நாடெங்கிலும் முக்கிய பொருளாகிவிட்டது. எல்லா அலுவல்களுக்கும் அது அவசியம் தேவைப்படுகிறது.

தமிழ்ப் பகுதிகளில் மட்டுமன்றி தென்னிலங்கையிலும் அடையாளக் கார்ட் முக்கிய தேவையாக்கப்பட்டுள்ளது.

அடையாளக் கார்ட் இல்லாதவர்கள் சந்தேகக் கண்ணோடு பார்க்கப்படுகிறார்கள்.

தெற்கில் அடையாளக் கார்ட்டுகளைப் பறித்துச் செல்லும் இயக்கம் ஒன்று தொடங்கி உள்ளது.

அதனால் அடையாளக்கார்ட் விடயத்தில் மக்கள் பல சிரமங்களையும், சில சந்தர்ப்பங்களில் ஆபத்தையும் எதிர்நோக்கவேண்டி உள்ளது.

எனினும் காணமற் போகும் அடையாளக் கார்ட்டுகளுக்குப் பதிலாகப் புதிய கார்ட்டுகளைப் பெறுவது சிரமமாக உள்ளது. அடையாளக் கார்ட்டுகளுக்கு விண்ணப்பித்தால் பெரும் காலதாமதத்துடனேயே அவை வழங்கப்படுகின்றன. பல மாதங்கள் காத்திருக்க வேண்டி உள்ளது.

இந்தத் தாமதத்தைத் தவிர்க்கப் புதிய அடையாளக் கார்ட்டுகளைத் துரிதமாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறதாம்.

காணமற் போகும் தேசிய அடையாளக் கார்ட்டுகளைப் புதிதாகப் பெற்றுக்கொள்வதற்கு, தத்தம் கிராமசேவை அதிகாரிகள் மூலம் சமர்ப்பிக்கப்படும் முறையான விண்ணப்பத்துக்குப் புதிய அடையாளக் கார்ட்டுகள் துரிதமாக

(6ஆம் பக்கம் பார்க்க)

## தலையில்லாத சடலங்கள்

கொழும்பு, ஆகஸ்ட் 30

மாத்தளை மாவட்டத்தில் உக்குவெல என்னும் இடத்தில் தலையில்லாத இரண்டு சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன. (ஒ-எ)

## ருபவாஹினியின் தமிழ்க் கொலைச் சேவை!

யாழ்ப்பாணம், ஆக: 30

'ரூபவாஹினி' தொலைக்காட்சிசேவை தமிழ்க் கொலைச் 'சேவை'யாக மாறி வருகிறது.

ரூபவாஹினியில் நாளாந்தம் தவறாது நடக்கும் ஒரு நிகழ்ச்சி மாலை 6-30 மணிக்கு வாசிக்கப்படும் செய்தியாகும்.

தொலைக்காட்சி, வானொலி ஊழியர்கள் கடமைக்குச் செல்லக்கூடாது எனப் பயமுறுத்தப்பட்டதைத் தொடர்ந்து—கடந்த ஒரு வார காலத்துக்கு மேலாக நாளுக்கு ஒரு புதியவர் தமிழ்ச் செய்தி அறிக்கையை வாசித்து வருகிறார்.

புதிய முகங்கள் செய்யும் தமிழ்க் கொலைகள் தெற்கில் நடக்கும் கொலைகளை விட மோசமாக உள்ளன!

உதாரணத்துக்கு —

(6ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கிலும் ஜே.வி.பியினரை தேடும் படலம் ஆரம்பம்!

மட்டக்களப்பு ஆகஸ்ட் 30

கிழக்கு மாகாணத்தில் சிங்கள மக்கள் வாழும் பகுதிகளில் ஸ்ரீலங்கா படையினர் தேடுதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

சேருவில, சந்தளாய், அம்பாறை போன்ற பகுதிகளில் ஜே.வி.பியினர் ஊடுருவி உள்ளதாகக் கிடைத்த தகவல்களை அடுத்தே தேடுதல் ஆரம்பிக்கப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவித்தன.

இந்தியப் படையினரின் அனுமதியுடனேயே இந்நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (ஒ-21)

## அரச அலுவலகங்கள் தெற்கில் தீக்கிரை!

கொழும்பு ஆகஸ்ட் 30

அக்குரஸ்ஸ, வெலிகம ஆகிய இடங்களில் உதவி அரசஅதிபர் அலுவலகக்கட்டடங்கள் இனந்தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டன.

திஹாகொட தபாற்கந்தோருக்கு அருகில் கைகள் கட்டப்பட்ட நிலையில் எரிந்த சடலம் ஒன்று பொலீஸாரால் கண்டெடுக்கப்பட்டது. (ஒ-எ)

## தெற்கில் 25 சடலங்கள்; முன்னாள் எம்.பி.யும் கொலை

### மனித உரிமை சட்டத்தரணியும் தப்பவில்லை

கொழும்பு, ஆக: 30

தென்பகுதியில் பண்டாரகமவில் 17 பேரின் சடலங்களும், வெலிகமவில் 8 பேரின் சடலங்களும் நேற்று கண்டு பிடிக்கப்பட்டன.

இதேவேளை முன்னாள் எம்.பியான பெண்மணி ஒருவரும் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பண்டாரகமவில் இரவு நேரம் துப்பாக்கி வெடிச் சத்தங்கள் கேட்டதாகவும் மறுநாள் காலை 17 சடலங்கள் வீதி ஓரங்களில் எறியப்பட்ட நிலையில் காணப்பட்டன என்றும் ஊர்வாசிகள் தெரிவித்தனர்.

சடலங்கள் அடையாளங்

(6ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் மக்கள் வங்கியிலும் அடகு நகைகள் மீளளிப்பு

யாழ்ப்பாணம்' ஆக. 30

மன்னார் மக்கள் வங்கிக் கிளையிலும் அடகு நகை மீளளிக்கும் வேலைகள் அடுத்த மாதம் 8 ஆம், 9 ஆம் திகதிகளில் நடைபெற இருக்கின்றன.

1984 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 21 ஆம் திகதிக்கு முன் பணம் செலுத்தியவர்களின் நகைகளே மீளளிக்கப்பட இருக்கின்றன.

நகைபெற வரும் போது பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு, அடையாள அட்டை, வங்கியின் கடிதம் ஆகியன கொண்டுவர வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ3)

## யாழ். உ, அ. பிரிவில் ஆறாயிரம் குடும்பங்களுக்கு ஜனசக்திச் சான்றிதழ்கள்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 30

ஜனசக்தி திட்டத்தின் முன்னோடியாக எதிர்வரும் செப்டம்பர் பத்தாம் திகதிக்கு முன்பதாக, யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட ஆறாயிரம் குடும்பங்களுக்கு ஜனசக்தி திட்ட உரிமைச் சான்றிதழ்கள் வழங்கப்பட உள்ளன.

இவர்கள் எதிர்வரும் அக்டோபர் முதலாம் திகதி தொடக்கம் உதவிப் பொருள்களைப் பெறுவதுடன் சேமிப்புகளையும் ஆரம்பிக்க வசதி செய்யப்படும்.

யாழ்ப்பாண உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள பதினொரு கிராம சேவகர் பிரிவுகளில் சுமார் 17 ஆயிரம் பேர் உணவு முத்திரை வசதி பெற்றிருந்தனர். ஆயினும் அவர்களில் மிகவும் வறுமை நிலையில் உள்ளவர்கள் என்ற அடிப்படையிலேயே பிரஸ்தாப 6 ஆயிரம் பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

முன்னோடித் திட்டத்தில் ஆறாயிரம் பேர் பயன்பெறுவர் ஆயினும் அடுத்த கட்டங்களில் ஏனையவர்களுக்கும் ஜனசக்தி வசதி செய்யப்படும் என அறியவருகிறது. (அ-9)

## அலுவலகம் செல்லலாம்; வேலை செய்யக் கூடாது!

### நேற்று விடுக்கப்பட்ட பணிப்பு இது!!

கொழும்பு, ஆகஸ்ட் 30

அரச ஊழியர்கள் அலுவலகங்களுக்குச் செல்லலாம்; ஆனால் ஒரு நிபந்தனை; அலுவலகங்களில் அவர்கள் வேலை செய்யக் கூடாது.

இந்த அறிவிப்பு நேற்று விடுக்கப்பட்டது யாரால்...? ஜே. வி. பி. இயக்கத்தினர் தான் இந்த அறிவிப்பை விடுத்தனர்.

கடந்த திங்கட்கிழமை முதல் ஒருவார காலத்துக்கு வேலை நிறுத்தம் செய்யுமாறு ஜே. வி. பியினர் அழைப்பு விடுத்திருந்தனர் என்பதும்—

அதை அடுத்து நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) மாலை அரசாங்கம் விடுத்த அறிவிப்பில் ''வேலைக்குச் செல்லாதவர்களுக்கு சம்பளம் வழங்கப்படமாட்டாது'' என்று தெரிவிக்கப்பட்டது என்பதும் தெரிந்தவையே. (ஒ-எ)

## 3 ஹெலிகள் வட்டமிட 9 மணிநேரம் மோதல்!

முல்லைத்தீவு, ஆகஸ்ட் 30

முல்லைத்தீவுப் பகுதியில், அளம்பில் வீதியில் 5ஆம் கட்டைக்கும் 6 ஆம் கட்டைக்கும் இடையில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

கடந்த திங்கட்கிழமை காலை 5 மணிக்கு ஆரம்பமான மோதல் பிற்பகல் 2 மணிவரை தொடர்ச்சியாக 9 மணித்தியாலங்கள் இடம்பெற்றதாக அங்கிருந்து வந்த தகவல்கள் தெரிவித்தன.

மூன்று ஹெலிக்கொப்டர்கள் அப்பகுதியில் சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக்கொண்டிருந்த அதே வேளையில்—

ஷெல் சத்தங்கள் அடுத்தடுத்து கேட்டன என்றும் சரமாரியான துப்பாக்கி வேட்டுக்களும் கேட்டன என்றும் அந்தத் தகவல்கள் தெரிவித்தன.

இம் மோதலின் போது 3 ஜவான்கள் கொலையுண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. போராளிகளில் சிலரும் உயிரிழந்ததாகச் சொல்லப்பட்டது. எதனையும் விபரமாக ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை. (ஒ-92)

## நாவாந்துறையில் இளைஞர் கொலை

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 30

நாவாந்துறைப் பகுதியில் நேற்றுக் காலை இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கொலையுண்டவர் சண்ணேபுரம் பகுதியைச் சேர்ந்த செல்வராஜா செல்வரூபன் (வயது 17) என்பவர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

## பாதுகாப்புப் படையினரின் வீடுகள் எரிப்பு!

கொழும்பு, ஆக 30

அநுராதபுர மாவட்டத்திலுள்ள, கஹட்டகஸ்கிலியாவில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த பத்து வீரர்களுக்குச் சொந்தமான வீடுகள் இனந்தெரியாதோரால் எரிக்கப்பட்டன. (அ-எ)

## யாழ். ஆஸ்பத்திரியில் கண் மாற்றுச் சிகிச்சை!

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 30

யாழ்ப்பாணத்திலும் இப்போது கண் மாற்றுச் சிகிச்சைகள் செய்யப்படுகின்றன. அதனால் தமிழ்ப் பகுதிகளில் கண் பார்வை இழந்த பலருக்கும் அதனைப் பெறும் வாய்ப்பு உண்டாகும் சாத்தியம் உருவாகலாம்.

இதுவரை மூன்று கண் மாற்றுச் சிகிச்சைகள் யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் நடைபெற்றுள்ளன.

ஆகக் கடைசியாகக் கடந்த திங்கட்கிழமை அரியாலையைச் சேர்ந்த 44 வயதான திருமதி இராமநாதனுக்குக் கண் மாற்றுச் சிகிச்சை செய்யப்பட்டது. ஆண் ஒருவரின் கண்

(6ஆம் பக்கம் பார்க்க)

## "பாரத் பந்த்" இன்று: தமிழ் நாட்டுக்கு மத்திய பொலீஸ் விரைவு

சென்னை, ஆக 30

எதிர்க்கட்சிகள் இந்தியாவில் இன்று நடத்தும் 'பாரத் பந்த்'தின்போது அ. தி.மு.க. திமுக தொண்டர்களிடையே மோதல் ஏற்படலாம் என்ற அச்சம் காரணமாக மத்திய பொலீஸ் ரிசேர்வ் படையின் ஐந்து அணிகள் தமிழ்நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

முதலமைச்சர் கருணாநிதியின் வேண்டுகோளின் பேரில் இவை மத்திய அரசினால் அனுப்பப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

## நல்லூர் கந்தனின் தேர்ப் பவனி காண அலைமோதிய பக்தர் கூட்டம்

யாழ்ப்பாணம் ஆக-30

அல்லல் அறுக்கும் நல்லைக் கந்தனின் வருடாந்த ரதோற்சவம் அருள் மயமான சூழலில் மிகவும் பக்திபூர்வமாக நேற்று நடந்தேறியது.

ரதபவனி வெளிவீதியில் நடக்கும் என்ற முடிவு மிகப் பிந்தியே எடுக்கப்பட்ட போதும், குடாநாட்டின் பல பாகங்களில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் முருகன் தேரேறி வரும் அருட்காட்சியைக் காணத் திரண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்க ஒன்று. அதிகாலையில் இருந்தே அடியார் கூட்டம் ஆலயம் எங்கும் அலைமோதியது.

வள்ளி தெய்வானை சமேத ஆறுமுகப்பெருமான் நேற்றுக் காலை 7-15 மணிக்கு ரதபவனியை ஆரம்பித்து கோவில் வீதியெல்லாம் நிறைந்து வழிந்த பக்தர்களுக்கு தரிசனம் அளித்தார்.

நல்லைக்கந்தன் தேரில் பவனி

(6ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

[30- 8 - 1989]

ஆவணி 14 புதன்கிழமை

நக்ஷத்திரம்: ஆயிலியம்

சுபநேரம்:

4-35 முதல் 6-05 வரை.

ராகுகாலம்:

12-05 முதல் 01-35 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

அமாவாசை விரதம்

### முச்சந்தி முரளி



கொலையள் மலிஞ்ச காலத்திலை தமிழைக் கொலை செய்தால் யார் கேட்கப் போகினம் எண்ட நினைப்பிலைதான் உது நடக்குதோ......?

ஞானக்கதிர்
அன்பு-அறநெறி-ஆன்மீகம்

மூன்றாவது இதழ் இப்போது அமோகமாக விற்பனையாகிக் கொண்டிருக்கிறது!
★ நல்லூர் கந்தனின் நான்கு வர்ண அழகிய அட்டைப் படம்.
★ உள்ளே நான்கு பக்க நல்லைக்கந்தன் உற்சவமலர்.
★ வேதத்தில் விஞ்ஞானம்;
★ வாரியார் வாய்மொழி.
★ உபநிடதங்கள் பற்றிய அறிமுகம்.
★ திருமகள் திருவருள் பெற...
★ நல்ல காலம் பற்றி (ஜோதிடம்)
★ பிள்ளையார் தீர்ப்பு, கந்தன் கருணை (சமயக்கதைகள்)
★ மாவிட்டபுரம், மருதடி, சுதுமலை அம்மன் கோவில்கள் பற்றிய கட்டுரைகள்;
மற்றும் பல...
மாதந்தோறும் மலரும் இந்து சமய ஞானக் களஞ்சியம்;
இன்றே வாங்குங்கள்;
நல்லூர் ஆலயத்திலும் விற்பனையாகிறது;
விலை ரூபா 5 மட்டுமே;

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

CD 50 Braniu Model மோட்டார் சைக்கிள் 95 Sri இலக்கத் தொடரில் 958/41, K. K. S ரோட் (நாச்சிமார் கோவிலுக்கு முன்பாக) யாழ்ப்பாணம் எனும் முகவரியில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள விரும்புவோர் 1ஆம் 2ஆம் திகதிகளில் காலை 9 - 12 மணிக்கிடையில் நேரில் சந்திக்கவும். (1776)

எம்மிடம் அண்மையில் வெளியிடப்பட்ட மருத்துவ நூல்கள் [Medical Books] அதி நவீன கம்பியூட்டர் நூல்கள் [Latest Computer Books] கதைப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள் மற்றும் சகலவிதமான வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். மண்டேலா ரேடர் [புத்தகசாலை] இல. 02 பஸ் நிலையம், யாழ்ப்பாணம். [1551]

### தேவை

புதிதாக ஆரம்பித்திருக்கும் எமது ஸ்தாபனத்திற்கு பெண் காசாளர் தேவை. குறைந்தது க. பொ. த (சாதாரணதர) பரீட்சையில் ஆங்கிலம் உட்பட சித்தியடைந்திருத்தல் வேண்டும். யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. தகைமைகளுடன் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி: பஸ்தியன் புத்தகசாலை, 390 பிரதான வீதி, யாழ்ப்பாணம். [1777]

2 ஆம், 4 ஆம் ஆண்டுப் பிள்ளைகளுக்கு வீட்டில் படிப்பிக்க ஆசிரியர் தேவை, தொடர்பு: புதுவாழ்வு நிலையம், கூளாவடி, ஆனைக்கோட்டை. (1768)

ஸ்ரான்லி வீதியில் பிரபல்யமான ஸ்தாபனம் ஒன்றிற்கு ரூபா 6 லட்சத்திற்குக் குறையாமல் சேருவதற்குப் பங்காளி ஒருவர் தேவை. வியாபாரத் தன்மை: மோட்டார் Cycle & Spare Parts, T.V & Deck Sales M. மகேந்திரன் ஸ்ருடியோ டில்கா, யாழ்ப்பாணம். (பஸ்நிலையம் முன்பாக) (1769)

### வடகம் தேவை

சுத்தமான வேப்பம்பூ வடகம் தொகையாகத் தேவை; விற்பனைக்குள்ள அளவு, கிலோ விலை உடன் அறியத்தரவும். வேப்பம்பூவும் வாங்கப்படும். உடன் தொடர்பு கொள்ளவும் 585, C/o உதயன், யாழ்ப்பாணம். (1763)

### மணமகன் தேவை

அந்தணர் குல 31 வயது. 7 இல் செவ்வாய் உடைய மணமகளுக்கு அதே இன மணமகன் தேவை; 584. C/o Uthayan. (1742)

### தவறிவிட்டது

பெரியதம்பி சுப்பிரமணியம் ஆகிய எனது அடையாள அட்டை (381961893 V) 20-8-89 அன்று சுளிபுரம் சத்தியக்காட்டு சந்தைக்கும் சுளிபுரம் மத்தியிலுள்ள வீட்டிற்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் சுளிபுரம் மத்தியிலுள்ள க. வாமதேவனிடம் ஒப்படைக்கவும்; தகுந்த சன்மானம் வழங்கப்படும். (1773)

### A/L இரசாயனம்

108, பிறவுண் Road, இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ். ஆரம்பம் A/L 90. 01-09-89 வெள்ளி 6 30 a.m A/L 91, பிரிவு I 31-08 89 வியாழன் 6.30 a.m A/L 91, பிரிவு II 02-09-89 சனி 11.30 a.m A/L 89 விஞ விடை 01-09-89 வெள்ளி 4 30 சனி, ஞாயிறு 8-5 p m (1758)

### இரசாயன நூல்

ஆசிரியர் சத்தீஸின் இரசாயன நூல்கள் வெளிவந்து விட்டன. அடிப்படை இரசாயனம் பகுதி I, பகுதி II சேதன இரசாயனம் பகுதி I பகுதி II, சேதன இரசாயனம் பகுதி II பூபாலசிங்கம், ஸ்ரீ சுப்பிரமணியம், ஸ்ரீலங்கா புத்தகசாலை யாழ்ப்பாணம், சிவா பெடிக்கல்ஸ் சாவகச்சேரியிலும் நேரிலும் பெற்றுக் கொள்ளலாம். (1759)

### ரேனியோ

ரோனியோ தட்டச்சு மற்றும் சகல அச்சு வேலைகளும் குறித்த தவணையில் சிறந்த முறையில் செய்து கொள்ள; தயா அச்சகம், 138 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (மனோகரா சந்தி) (சி-2359)

### கல்வி

Y.M.C.A. பருத்தித்துறை பாட வகுப்புகள் 06-09 89. மாலை 3.00 மணிக்கு ஆரம்பமாகும் என்பதை அறியத் தருகின்றோம்; நிர்வாகம். (1846)

### கோழிக்குஞ்சுகள் விநியோகம்

Golden Comet சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள் புரொயிலர் குஞ்சுகள் 10-09-89 இல் விநியோகிக்கப்படவுள்ளன: முன்கூட்டியே பதிவு செய்யவும். புரொயிலர், இறைச்சிக்கோழிகளும் விற்பனைக்குண்டு. பரம் ஏஜன்சி, கிளிநொச்சி. (1766)

### சேவை

திருமண சேவைக்கு விவாகப் பொருத்தம் பார்ப்பதற்கு காணி வாங்குவதற்கு விற்பதற்கு எதுவானாலும் உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: கு. திருவிளங்கம் புதிய மாங்கல்யா மல்ரி சேவிஸ் 14, விதானையார் ஒழுங்கை, கொழும்புத்துறை. மேற்கு. (1724)

### கோழிகுஞ்சு விநியோகம் (Uplands Farm)

(Dekalb) பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள் (Cobb) புரொயிலர் குஞ்சுகள் (30. 8. 89) புதன்கிழமை குறைந்தவிலைக்கு விநியோகிக்கப்படும். முன்கூட்டியே, பதிவு செய்க. இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அருகில்) குறிப்பு. (எங்கள் குஞ்சுகளுக்கு கூட் தேவை இல்லை) (1740)

### விற்பனைக்கு

24.5 H.P. டீசல் இயந்திரம் விற்பனைக்குண்டு. நா. சிவபாலமூர்த்தி, கே. கே. எஸ். ரோட், குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில். (1841)

### கோழிக்குஞ்சுகள் விநியோகம்

Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் 30 ஆம் திகதி புதன்கிழமையும், Hybro புரொயிலர் குஞ்சுகள் 31 ஆம் திகதி வியாழக்கிழமையும் விநியோகிக்கப்படும்; முன் கூட்டியே பதிவு செய்க; சற்குணராசா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (1725

### Spoken English

Spoken English புதிய பிரிவு ஆரம்பம் 2. 9. 89 சனி, ஞாயிறு மட்டும்; நேரம் 3 - 4½ p. m. தொடர்பு: S. B. Iyar, 12 வைமன் வீதி, நல்லூர். (1821)

# யுத்த நிறுத்தம் செய்வதற்கு ஜே.வி.பி. சார்பில் எஸ். டி. நிபந்தனை

கொழும்பு, ஆக 30

இந்திய அமைதிப்படையைத் திருப்பி அனுப்பி, இலங்கை இராணுவத்தை வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கு ஜனாதிபதி பிரேமதாஸா அனுப்பி வைப்பாரானால் யுத்த நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ள ஜே. வி. பி. தயாராக இருக்கிறது.

இலங்கை முன்னேற்ற முன்னணித் தலைவரும் முன்னாள் எம். பி. யுமான எஸ். டி. பண்டாரநாயக்கா கடந்த சனிக்கிழமை விடுத்த அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்து இருக்கிறார்.

அந்த அறிக்கையில்-

நாட்டின் இன்றைய நெருக்கடி நிலைமைக்குக் காரணம் வெஸ்ட்மினிஸ்டர் முறையிலான அரசு முறையே. மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து இந்த ஆட்சி முறையைத் தூக்கி எறிய வேண்டும்.

அரசு நிர்வாகம், இராணுவம் பொலீஸ் படை ஆகியவற்றில் இருந்து ராஜினாமா செய்யும் உரிமை அவற்றில் பணிபுரிபவர்களுக்கு வழங்கப்படவேண்டும்: நாட்டில் அமைதி திரும்பியபின்னர் அவற்றில் அவர்கள் மீண்டும் சேர்ந்து கொள்ள அனுமதி வழங்கவேண்டும்.' என்றும் திரு: பண்டார நாயக்கா மேலும் தெரிவித்திருக்கிறார்.

### முறைப்பாடு

நெடுங்கேணியைச் சேர்ந்த நயினாமடு உபதபால் கந்தோர் ஒழுங்காக இயங்குவதில்லை என்றும் —

பொதுமக்களின் தேவைக்கான முத்திரைகள், முத்திரைக் கடித உறைகள் என்பன கிடைப்பதில்லை என்றும்-

அங்குள்ள தபால் பெட்டிகளில் போடப்படும் கடிதங்களும் பாதுகாப்பாக அனுப்பப்படுவதில்லை என்றும் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது: (உ-161)

### பாதயாத்திரை

ஆத்மஜோதி நா: முத்தையா தலைமையில் செப்டம்பர் மாதத்தில் இரண்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் திருத்தல பாதயாத்திரைகள் நடைபெற விருக்கின்றன; முதலாம் திகதி முதல் பத்தாம் திகதிவரை வலிகாமம் மேற்கிலும் 14 ஆம் திகதி முதல் 10 நாட்களுக்கு கிளிநொச்சியிலும் இப்பாதயாத்திரைகள் இடம் பெறும் எனத் தெரிய வருகிறது: (க-31)

## வீடற்றவர்களுக்கு

# பலாலியில் குடியேற்றத் திட்டம்

யாழ்ப்பாணம், ஆக: 30

''பலாலியில் வீடற்ற ஏழை மக்களுக்கு உதவும் முகமாக குடியேற்றத்திட்டம் ஒன்றை ஏற்படுத்த பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விரைவில் இதற்கு செயல் வடிவம் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன;

இவ்வாறு வடக்கு - கிழக்கு மாகாணசபை உறுப்பினர் திரு. பி. பிரபாகரன் தெரிவித்தார்;

பலாலியில் கிராமோதய சுகாதார நிலையம் ஒன்றை நிறுவுவதற்கான காணியை கையளிப்பு செய்யும் வைபவத்தில் கலந்து பேசும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

மேற்படி காணியை திரு. இ. கிருஷ்ணபிள்ளை என்பவர் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

இக் காணியை கையளிக்கும் வைபவத்தில் பலாலி ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிப் பொறுப்பாளர் திரு: ரவி, திரு: விஜயன், திரு: பீஎம் ஆகியோரும் கலந்து கொண்டனர்;

திரு: வள்ளிபுரம் தலைமையில் நடந்த வைபவத்தில் மாகாண சபை உறுப்பினர் திரு. பிரபாகரன் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

மக்களின் முன்னேற்றத்திற்காக நாம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு மக்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும்: எமது பிரதேசத்தைக் காப்பாற்றும் பொறுப்பும் எம்மிடம் உண்டு. அதற்காக எமக்கு ஓர் இராணுவம் தேவை. ஆகவே தான் இளைஞர்களுக்கு இராணுவப் பயிற்சி கொடுக்கின்றோம்;

எமது நோக்கம் மாகாண சபையை பலப்படுத்தி ஈழத்தின் நாடாளுமன்றமாக ஆக்குவதே எமது முயற்சிக்கு மக்கள் ஆதரவும், பங்களிப்பும் தரவேண்டும்;

இப்படி அவர் கூறினார்;

# கல்வி விற்பன்னர்கள் வற்புறுத்துவதையே பாரதியும் விளக்கினார்

கொக்குவில், ஆக. 30

''ஓடி விளையாடுபாப்பா'' என்று கூறி அதன் பின்பே படிப்பைப் பற்றி பாரதியார் கூறினார். உளத்தத்துவவியலாளர்களும், கல்வி விற்பன்னர்களும்வற்புறுத்துவதையே பாரதியார் மிக அழகாக ''ஓடி விளையாடு பாப்பா'' பாடல் மூலம் கூறினார்.

யாழ் வைத்தீஸ்வர வித்தியால விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற பாலர் கல்விக் கழகத்தால் நிர்வகிக்கப்படும் 14 பாலர் பாடசாலைகளின் பிள்ளைகள் பங்கு பற்றிய விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வண்ணார்பண்ணை தெற்கு கொத்தணி அதிபரும், யாழ் வைத்தீஸ்வர வித்தியாலய அதிபருமான திரு சி. சிவசரவணபவன் மேற்கண்டவாறு கூறினார்.

பாலர் கல்விக் கழகத்தலைவர் திரு ஆ: செல்லையா தலைமையில் விழா நடைபெற்றது,

வைத்திய கலாநிதி திருமதி பரமேஸ்வரி வரவேற்புரை நிகழ்த்தினார்.

விளையாட்டுப் பொறுப்பாளர் திரு: விஜயநாதன் நன்றியுரை கூறினார்;

வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை திருமதி சிவசரவணபவன் வழங்கினார்: (இ-69)

## வைத்தியசாலை இயங்கவில்லை

நெடுங்கேணி, ஆக 30

நெடுங்கேணியில் நூற்றுக்கு மேற்பட்ட நோயாளர்கள் தங்கி சிகிச்சை பெறுவதற்கான நோயாளர் விடுதியும் மருத்துவ விடுதியுமுள்ள ஆதார வைத்தியசாலை அண்மைக் காலமாக இயங்காமல் இருக்கின்றது: இதனால் ஏழை விவசாய மக்கள் 19 மைல் தூரத்தில் உள்ள முல்லைத்தீவுக்கும் 29 மைல் தூரத்தில் உள்ள வவுனியாவுக்கும் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது: (க-180)

## யாகப்பர் ஆலய ஆண்டு விழா

'எமது பங்கின் பாதுகாவலரான புனித யாகப்பர் இறைமகன் யேசுவுக்காக தமது உயிரையும் பொருட்படுத்தாது பாரெங்கும் சாட்சி பகர்ந்தார்: அப்போஸ்தவர்களிடையே முதல் கனியாக தம்மை அர்ப்பணித்த அவருடைய தியாக உள்ளத்தைப் போன்று நாமும் இறைவனுக்கு எமது உள்ளங்களை அர்ப்பணிக்க வேண்டும்:

அண்மையில் நடைபெற்ற இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தின் 110 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் இடம்பெற்ற கூட்டுத்திருப்பலியின்போது மறையுரை ஆற்றிய அருட்தந்தை எஸ். நீக்கிலஸ் அடிகளார் மேற்கண்டவாறு கூறினார்:

மேற்படி விழாவில் நவநாட்கள் பங்குத் தந்தை எம். ரி. பற்றிக் அடிகளாலும் அருட்தந்தை எஸ்: நீக்கிலஸ் அடிகளாலும் நடத்தப்பட்டன.

### கோரிக்கை

ஆலய மகோற்சவ காலங்களில் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக்கு முரணாக உடை அணிந்து வருவது தவிர்க்கப்பட வேண்டும் எனவும் பெண்களும் குழந்தைகளும் நகைகள் அணிந்து வருவதைக் கூடிய அளவு குறைத்துக்கொள்ளுதல் விரும்பத்தக்கது எனவும் தெல்லிப்பளை துர்க்கை அம்மன் தேவஸ்தானம் கோரியுள்ளது;

# விபத்துக்குள்ளாகும் தொழிலாளர்கள் உடன் தொடர்பு கொள்ள ஆலோசனை

யாழ் மாவட்டத்தில் மின் தடையை அடுத்து வேறுவகையால் தொழிற்சாலைகள் இயக்கப்படுவதனால் விபத்துக்கள் அதிகரிக்க வாய்ப்புக்கள் உண்டு. ஆகவே விபத்துக்குள்ளாகும் தொழிலாளர் உடனடியாகத் தொழிற்திணைக்கள தொழிற்சாலைப்பிரிவுடன் தொடர்பு கொள்ள வேண்டும்:

தொழில்திணைக்கள அதிகாரிகள் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். தொழில்திணைக்கள தொழிற்சாலைப்பிரிவு அதிகாரிகள் தம்கோரிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது;

யாழ்: மாவட்டத்தில் மின் தடை காரணமாக தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ள போதும் சில தொழிற்சாலைகள் வேறுவகையால் இயங்குகின்றன. இம்முறைகளால் தொழிற்சாலைகளில் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

இவ்விபத்துக்களில் சிக்கும் தொழிலாளர்கள் உடனடியாக எம்கிளைக்கு அறியத்தந்தால் நஷ்டஈடு பெறமுடியும்; கஸ்தூரியார் வீதியிலுள்ள தொழிற்திணைக்களத்தில் சம்பவம் நடந்து இருவாரத்துக்குள் அறிவிக்க வேண்டும்:

இப்படி அவ்வதிகாரிகள் தெரிவித்தனர். (இ-3)


The Jaffna Education Centre

## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

(சாந்தி சினிமா முன்பாக மேல்மாடியில்)

G. C, E O/L, A/L
Spoken English
Short Hand & Typing
G. A. Q. I, I. A. B

ஆகிய வகுப்புகள் நடைபெறுகின்றன;

புதிய பிரிவுகள்: 02·09·89 இல் ஆரம்பமாகின்றன.

● பெண்களுக்கு விடுதி வசதியும் உண்டு.

பழைய நிர்வாகத்தினரால் திறமையான முறையில் நடைபெறுகின்றன:

✶ விண்ணப்பங்களுக்கு முந்துங்கள் ★

[1765]



## அர்ச்சுனா

கல்வி — முயற்சி — பெருவாழ்வு

## சிறுவர் இலக்கியத் திங்கள் இதழ்

பெற்றோர்களே!

உங்கள் பிள்ளைகளின் ஆளுமையை விருத்தி செய்ய விரும்புகின்றீர்களா?

★

"அர்ச்சுனா"

வாங்கி மாதந்தோறும் பரிசாக வழங்கவும்.

உங்கள் பகுதி உதயன் முகவர்களிடம் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

விலை ரூபா 4/ மட்டுமே!

ஆண்டுச் சந்தா ரூபா 55/-

தபாலில் பெற விரும்புவோர் இத்தொகைக்குக் காசுக்கட்டளை / காசோலை பெற்று நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் என்று எழுதி,

நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தபெ. எண்-23, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பவும்:

மேலதிக விபரங்களுக்கு; கொழும்பில்;

எஸ் ஜி சி. ரீம்
61, நியூ புல்லர்ஸ் வீதி,
கொழும்பு-4.


## முக்கிய அறிவித்தல்

வடக்கு - கிழக்கு மாகாண அரசு

### வேலைவாய்ப்பு விண்ணப்பங்கள்

வடக்கு - கிழக்கு மாகாண அரசின் அமைச்சுக்கள் திணைக்களங்கள் என்பவற்றில் உள்ள வெற்றிடங்களுக்கான நிரந்தர நியமனங்கள் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் காலத்துக்குக் காலம் விளம்பரங்கள் மூலம் வேலைவாய்ப்பு விண்ணப்பங்கள் கோரப்பட்டு தகுதியின் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படும்:

இது வரை வடக்கு - கிழக்கு மாகாண அரசின் திட்டமிடல், இளைஞர் விவகார, மனிதவள அமைச்சுக்கோ அல்லது வேறு ஏதாவது அமைச்சுக்கோ அனுப்பப்பட்ட வேலைவாய்ப்பு விண்ணப்பங்கள் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது;

எனவே, தற்போது வடக்கு - கிழக்கு மாகாண அரசில் கடமை புரியும் தற்காலிக (அமைய) ஊழியர்கள் உட்பட தகுதியுள்ள அனைவரும் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் விளம்பரங்கள் மூலம் வேலைவாய்ப்பு விண்ணப்பங்கள் கோரப்படும் போது நேரடியாக விண்ணப்பிக்க வேண்டும்;

மேலும் இம்மாதம் 17ஆம் 18ஆம் 20 ஆம் திகதிகளில் உதயனிலும் வேறு பத்திரிகைகளிலும் எழுதுவினைஞர், தமிழ் சுருக்கெழுத்தாளர், ஆங்கில சுருக்கெழுத்தாளர் போன்ற பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன,

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் தகுதியுள்ள அனைவரும் பொதுச்சேவை ஆணைக்குழுவினால் கோரப்பட்ட படி விண்ணப்பங்களை அனுப்பி வைக்கும்படி வேண்டப்படுகின்றனர்;

செயலாளர்,
திட்டமிடல், இளைஞர் விவகார,
மனிதவள அமைச்சு.

[இ-3303]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

குறள்:
அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை

பொருள்:
போர்க்களத்தில் பலரிடையில் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் அஞ்சாத வீரரைப்போல், குடியில் பிறந்தவரிடையிலும் தாங்க வல்லவர் மேல் தான் பொறுப்பு உள்ளது.

உதயன்

இல 198/3, நாவலர் வீதி, தொலைபேசி 24801 / 28073
யாழ்ப்பாணம்.
30 08 1989

# மக்களின் நீங்கா அவலம்

தெற்கில வன்செயல்கள் மிதமிஞ்சி விட்டன. மனித உயிர்கள் மதிப்பற்றவையாக்கப்பட்டு கொலைகள் மலிந்து விட்டன. நேற்றிலும்விட, இன்று இத்தனை அதிகம் என்று எண்ணிக் கணக்கிடும் வகையில் நாளாந்தம் படுகொலைகள் அங்கு அதிகரித்து வருகின்றன. ஆறுகள், குளங்கள், குட்டைகள் என்றும் வீதிகள், வீடுகள், மைதானங்கள் கடற்கரைகள் என்றும் சடலங்கள் கண்டெடுக்கப்படுகின்றன; காட்டில் குருவிகளைச் சுட்டு வீழ்த்துவது போல நாட்டில் மக்களைக் கொன்று குவிக்கிறார்கள்.

அரசுக்கும், அரசவிரோத சக்திகளுக்கும் இடையே உள்ள அதிகாரப் போட்டி, அரசியல் போட்டி என்பன அடுத்தவர் தரப்பை, அந்தத் தரப்பின் ஆதரவாளர்களைக் கொலைத்தனம் என்ற பழிவாங்கலாக மாறி, நவீன ஆயுதங்கள் மூலம் மக்கள் கூட்டத்தினரை அழித்தொழிக்கிறது.

இந்த விபரீத விளைவு கரை இல்லாமல், எல்லை வரையறை இல்லாமல் தொடர்ந்தால், மேலும் பல்லாயிரம் உயிர்கள் துப்பாக்கிகளுக்கு இரையாகும் ஆபத்து உண்டு.

அந்த ஆபத்தைத் தவிர்க்க அரசும், எதிர்க்கட்சிகளும் சேர்ந்து கூட்டாகக் கோரிக்கை விட வேண்டும் என்று அரசாங்கத் தரப்புத் தீர்மானித்தது உண்டு. (அது உள்ளார்ந்த விருப்பம் என்று முடிவிடச் சான்றுகள் இல்லை) ஆனால் அரசுடன் சேர்ந்து ஒரே கப்பலில் பயணஞ் செய்ய எதிர்க்கட்சிகள் விரும்பவில்லை; அரசியல் லாபம் அதற்குக் காரணமாக இருந்திருக்கலாம். எப்படியோ, கொலைகளை நிறுத்த வேண்டும் என்று கூட்டாகக் கோரிக்கை விடும் முயற்சி பிசுபிசுத்தது!

பதிலாக எதிரணிக் கட்சிகள் ஒன்று சேர்ந்து ஓர் அறிக்கையை வெளியிட்டன; கூட்டாக வெளியிட்டன; அந்தக் கூட்டறிக்கையும் மக்களுக்கு லாபம் தரக்கூடியதாக, நன்மை செய்யக்கூடியதாகத் தென்படவில்லை. மிக முக்கியமாக, மக்களைக் கொலைக்களத்தில் இருந்து உடனடியாகக் காப்பாற்றக் கூடிய அம்சம் எதனையும் அதில் காண முடியவில்லை.

நாடாளுமன்றத்தைக் கலைக்க வேண்டும்; ஜனாதிபதி பிரேமதாசா அரசு பதவி விலக வேண்டும். காபந்து அரசாங்கம் ஒன்றை நிறுவ வேண்டும். அரசியல் அமைப்பை மாற்ற வேண்டும். ஜனாதிபதி நிர்வாக முறையை மாற்றிப் பிரதமர் நிர்வாக முறையை மீண்டும் கொண்டுவர வேண்டும். இவையே எதிரணியினர் கோரிக்கைகள்;

இவற்றைச் செயற்படுத்தினாலும் மக்களை துப்பாக்கிக் குண்டுகளில் இருந்து காப்பாற்ற முடியுமா என்பது சந்தேகமே. மரண பயத்திலிருந்து மீட்டு சுய அறிவுள்ள மக்களாக மாற்ற முடியுமா என்பதும் ஐயமானதே.

ஏனெனில் இப்போது அரசு உள்ள இடத்துக்கு எதிரணியும், எதிரணி உள்ள இடத்துக்கு அரசும் மாறிக்கொள்ளும் ஓர் இடமாற்றமாக அமைந்து விட்டால், இடையில் அகப்பட்டு மீண்டும் அல்லற்படப் போகிறவர்கள், அழியப் போகிறவர்கள் மக்களே!

அரசமைப்பைத் திருத்துவது என்பது இலங்கையில் சர்வசாதாரணமாகி விட்ட ஒன்று. அதே போல அரசமைப்பை மாற்றுவதும் கைவந்த கலையாகி விட்டது. மக்களுக்காக, மக்களால் அரசமைப்பு என்ற நிலை மாறி கட்சிகளின் நன்மைக்காக, அவற்றின் தலைவர்களின் பதவி ஆசையை நிறைவேற்றுவதற்காக அரசமைப்புகளை உருவாக்குதல் என்றாகி விட்டது: நாட்டின் சீர்கேடுகளுக்கு எல்லாம் மூல காரணமும் முதற்காரணமும் அதுவேயாம்.

அரசியல் அமைப்பாயினும் சரி, சட்டம் இயற்றுவதாயினும் சரி, அதிகாரம் புரிவது — நிர்வாகம் செய்வதாயினும் சரி, மக்கள் நலன் பின்னே தள்ளப்படுகிறது; அரசியல்வாதிகளின் நலன் முன் நிறுத்தப்படுகிறது.

இந்த நாட்டில் அந்தச் சாபக்கேடு நீங்காதவரை, அரசமைப்புச் சட்டம் அடிக்கடி மாறும்; நிர்வாக முறை மாறிக் கொண்டே இருக்கும். ஆனால் மக்களின் அவலமும் அவஸ்தையும் மாறப்போவதில்லை; நீங்கப் போவதில்லை.

## நல்லூர் உற்சவகால அருட்பிரசாதம்

### வினை தீர்க்கும் கோலமெது?

அவ்வைக்குச் சுட்டபழம்
அளித்தே அவள் வாயால்
அமுதகவி கேட்ட சிறுவா!
தந்தைக்கு உபதேசம்
செய்தவா! இன்தமிழின்
தந்தையாய் வந்த முருகா!
செவ்வாயில் பால் கரக்கும்
பாலனோ? சிறுவனோ?
அல்லது நீ விருத்தன் தானோ?
கூறும்படி யார்கள் வினை
தீர்க்க உந்தன் கோலமெது?
அக்கோலம் காட்டு முருகா!

அரியாலை சின்னையா துரைச்சாமி.
(இன்று நல்லைக்கந்தன் தீர்த்தோற்சவம்)

யாழ் மாவட்ட விவசாயிகளுக்குத் தேவையான

# ஒல்லாந்து விதை உருளைக்கிழங்கு இறக்குமதியாகும்!

யாழ்ப்பாணம், ஆக. 30

யாழ் மாவட்டத்துக்குத் தேவையான கூடுதல் விளைச்சலைத் தரக்கூடிய விதை உருளைக்கிழங்கு முதல் தடவையாக ஒல்லாந்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட இருக்கிறது.

யாழ் மாவட்ட விவசாயிகளுக்கு இதுவரை காலமும் விவசாயத் திணைக்களம் விதை உருளைக்கிழங்கை உள்ளூரில் பெற்று வழங்கி வந்தது.

யாழ் மாவட்டத்துக்குத் தேவையான ஆயிரத்து 200 மெற்றிக் தொன் விதை கிழங்கை தனியார் ஸ்தாபனம் இறக்குமதி செய்து கமநல சேவை நிலையத்துக்கு வழங்கும்.

விவசாயிகள் கமநல சேவை நிலையங்களில் ஒரு பெட்டிக்கு 150 ரூபா வீதம் பணம் செலுத்தி பதிவு செய்யவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-3)

## கிளிநொச்சியில் தேடுதல்!

கிளிநொச்சி, ஆக: 30

கிளிநொச்சியைச் சேர்ந்த கோவிந்தன் கடைச்சந்தி, திருவையாறு பகுதிகளில் சனிக்கிழமை தேடுதல் இடம் பெற்றது.

இதனால் போக்குவரத்து தடைப்பட்டது. சிலர் கூட்டிச் செல்லப்பட்டு சில மணி நேரத்தில் விடுவிக்கப்பட்டனர். (ஓ-163)

## யாழ்ப்பாணத்துக்கு 13 ஆயிரம் இங்கிலாந்து மண்வெட்டிகள்

யாழ்ப்பாணம், ஆக. 30

யாழ் மாவட்ட விவசாயிகளுக்கு உதவும் வகையில் இங்கிலாந்தில் இருந்து 13 ஆயிரம் மண்வெட்டிகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இம் மண்வெட்டிகளில் ஒன்பதாயிரம் மண்வெட்டிகள் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணமாகவும், ஏனையவை மற்றைய விவசாயிகளுக்கும் வழங்கப்படும் என கமநல சேவை நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இம்மண்வெட்டிகளின் முதல் தொகுதியான 2 ஆயிரத்து 240 மண்வெட்டிகள் நல்லூருக்கு வந்து சேர்ந்துள்ளன என்றும், மிகுதியானவை கொழும்பிலிருந்து எடுத்து வரப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## அடம்பனில் உலர் உணவு

மன்னார், ஆக 30

அடம்பன் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள மேலும் 1600 குடும்பங்களுக்கு அத்தியாவசிய உலர் உணவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் திரு. குறூஸ் தெரிவித்தார்.

அண்மைக் காலத்தில் இடம் பெயர்ந்துள்ள கள்ளுட்டி, சாளம்பன், ஆள்காட்டிவெளி, பரப்புக் கடந்தான் பகுதி மக்களுக்கே உலர் உணவுப்பொருள்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யு என் எச் சி ஆரும் இப்பகுதி மக்களுக்குப் புடைவைப் பார்சல்களை வழங்கவுள்ளது;

அடம்பன், தாமரைக்குளம், நெடுங்கண்டல் கிராம மக்களுக்கும் மேலும் ஒரு வாரத்துக்கான உலர் உணவு வழங்க ஏற்பாடாகியுள்ளது. (க-ரி)

## திறப்பு விழா

ஓட்டுசுட்டானில் தெங்கு பனம் பொருள் உற்பத்தி கூட்டுறவுச் சங்கத்தின் புதிய கட்டிடத் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

புதிய கட்டிடத்தை பனை அபிவிருத்தி சபை வன்னிப் பிராந்தியத் தலைவர் திரு. ஏ. அற்புதராசா திறந்து வைத்தார்.

புதியகட்டடத்தை நிர்மாணிக்கவே 1 லட்சத்து 35 ஆயிரம் ரூபா செலவு ஏற்பட்டதாக சங்க முகாமையாளர் தெரிவிக்கிறார். (க-113)

## மனித உரிமைகள் குழு ஜனாதிபதியைச் சந்திக்கும்

கொழும்பு ஆக. 30

மனித உரிமை மீறல் பற்றி நாடாளுமன்றக் குழு வருகிற செப்டம்பர் முதலாம் திகதி ஜனாதிபதி ஆர். பிரேமதாஸவை சந்திக்கத் தீர்மானித்து உள்ளது.

இத்தகவலை நாடாளுமன்றக் குழுத்தலைவர் மஹிந்தராஜபக்ஷ தெரிவித்தார்.

மனித உரிமை மீறல் சம்பந்தமாக செய்யப்பட்டு உள்ள சுமார் 2 ஆயிரம் முறைப்பாடுகள் பற்றி இக்குழு ஜனாதிபதியுடன் பேசவுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் பாதுகாப்பு அமைப்பு, மன்னிப்புச்சபை மற்றும் செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளை இலங்கைக்கு வர அனுமதிப்பது குறித்தும் நாடாளுமன்றக் குழு ஜனாதிபதியுடன் பேச இருக்கின்றது. என்று தி: ராஜபக்ஷ தெரிவித்தார். (இ-எ)

## மாகாண சபைகளுக்கு அரசாங்கத்தினூடாகவே வெளிநாட்டு உதவி

கொழும்பு, ஆக. 30

எந்த ஒரு மாகாண சபையும் வெளிநாட்டு உதவியை அரசாங்கத்தின் ஊடாகவே பெறவேண்டும் என்று நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

நிதி அமைச்சுச் செயலாளர் திரு: ஆர். பாஸ்கரலிங்கம் அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள் மற்றும் அரச அதிபர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ள சுற்றுநிருபம் ஒன்றில் இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

சுற்று நிருபத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

★ மாகாண சபை ஒன்றுக்கான வெளிநாட்டு உதவி தொடர்பான எந்தவொரு பேச்சுவார்த்தையையும் இலங்கை அரசினால் மட்டுமே செய்யமுடியும்.

★ எந்தவொரு வெளிநாட்டு அரசும், அல்லது நிறுவனமும் மாகாண சபை ஒன்றுக்கு எந்த ஒரு உதவியையும் வழங்க விரும்பினால் இலங்கை அரசின் ஊடாகவே அதைச் செய்யலாம்; அத்தகைய உதவி வழங்கலுக்கான அறிவிப்புக்கள் அந்நிய மூலவள பணிப்பாளர் ஊடாகவே செய்யப்பட வேண்டும்: அவர் பாதுகாப்பு, வெளியுறவு மற்றும் சம்பந்தப்பட்ட வழி அமைச்சர்களுடனும் சம்பந்தப்பட்ட மாகாண சபையுடனும் கலந்து உதவிக்கோரிக்கையைப் பரிசீலனை செய்த பின்னர், அதை ஏற்றுக் கொள்வது தொடர்பாக அரசுக்கு சிபாரிசு செய்வார்.

அவ்வுதவி ஏற்றுக் கொள்ளப்பட்டால், இலங்கை அரசு அதைப்பெற்று, சம்பந்தப்பட்ட மாகாண சபைக்கு, திட்டத்தை நிறைவேற்ற அல்லது அத்தகைய உதவி எந்த நோக்கத்திற்காக வழங்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதோ அந்த நோக்கத்திற்கு ஒதுக்கீடு செய்யும். (இ-எ)

## அம்பாறையில் கடும் வரட்சி; பெரும் குடிதண்ணீர் தட்டுப்பாடு

அம்பாறை மாவட்டத்தில் தற்போது கடும் வரட்சி நிலவி வருகின்றது: இதனால் இந்த மாவட்டத்தில் தமிழ், முஸ்லிம் குடியேற்றக் கிராமங்கள் பலவற்றில் குடிநீர்த்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக சம்மாந்துறைப் பகுதியில் ஆழக்கிணறுகள்கூட வற்றி வரண்டு [illegible] இன்றன.

சம்மாந்துறைப் [illegible]

[illegible]லுள்ள தேனீர் கடைகளில் குடிநீர் நிறைக்கப்பட்டுள்ள தொட்டிகளுக்கு முன்பாக ''இது சம்மாந்துறைத் தண்ணீர், சிக்கனம் அவசியம்'' எனும் வாசகங்கள் எழுதப்பட்ட அட்டைகள் தொங்க விடப்பட்டுள்ளன.

மேலும் வரட்சி காரணமாக [illegible]

## சங்கக்கிளையில் மறைந்த பணம்

ஆவரங்கால் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக் கிளையில்பட்டப்பகலில் பணம் கையாடப்பட்டது:

புதன்கிழமை நண்பகல் இச் சம்பவம் நடைபெற்றது என அறியவருகிறது.

புதன்கிழமைநண்பகல் ஆவரங்கால் சிவன் கோவிலடி மோதல் சம்பவத்தை அடுத்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளரும் வெளியேறி—குறிப்பிட்ட நேரத்தின்பின் திரும்பிவந்து பார்த்தபோது லாச்சியில் இருந்த பணத்தில் 2157 ரூபாவைக் காணவில்லையாம். [க11]

## கடன் அடிப்படையில் சைக்கிள்கள்

ஒட்டுசுட்டான் தெங்குபனம் பொருள் உற்பத்தி கூட்டுறவுச் சங்கம் ஊழியர்களுக்கும் 18 புதிய சைக்கிள்களை கடன் அடிப்படையில் வழங்கியுள்ளது. (க-113)

## அம்பாறையில் சிறுபோக அறுவடை; நெல்விலை இன்னும் குறையவில்லை

அம்பாறை, ஆக, 30

அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக நெற் செய்கையின் அறுவடை வேலைகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன: இருப்பினும் நெல் விலையில் வீழ்ச்சி ஏற்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மாவட்டத்தின் முக்கிய கிருஷிகப் பிரிவுகளில், பெரும்பாலான ஏக்கர் காணிகளில்சிறுபோக நெற்செய்கை மேற் கொள்ளப்படாமையே நெல்விலையில் வீழ்ச்சி ஏற்படாமைக்குக் காரணமாகும்;

இப்பகுதிகளில் இடம் பெற்ற இன மோதல்கள் காரணமாக சிறுபோக நெற் செய்கை பல இடங்களில் மேற்கொள்ளப்படாது காணிகள் தரிசாக விடப்பட்டுள்ளன. (க-14)

## சம்மேளன அறிக்கை

யாழ்ப்பாணம், ஆக 30

தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குமாறும், ஆசிரியர்களின் அடிப்படைச் சம்பளத்தை அதிகரிக்கும் அமுல்படுத்துமாறும் மாகாண அரசுக்கான அதிகாரத்தை வழங்குமாறும் கோரி ஈழத் தொழிற்சங்க சம்மேளனத்தின் சார்பில் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. (க90)

## ஊர்காவற்றுறை - நெடுந்தீவு கிராம சேவையாளர் பிரிவுகள்

ஊர்காவற்றுறை, ஆக 30

ஊர்காவற்றுறை, நெடுந்தீவு ஆகிய இரண்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய கிராமசேவையாளர் பிரிவுகள் பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது; பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களை கிராமசேவையாளர்களாக பதவிமாற்றம் செய்த பின்னர் இவ்வாறு புதிய பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன என்று ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபரும் நெடுந்தீவு பதில் உதவி அரசாங்க அதிபருமான திரு: எஸ். சிவரத்தினம் தெரிவித்துள்ளார்;

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் முன்னர் இருந்த 14 பிரிவுகள் தற்போது 24 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளன.

அவை அனலைதீவு வடக்கு, அனலைதீவு தெற்கு, எழுவைதீவு, காரைதீவு, காரைநகர் மேற்கு, காரைநகர் வடமேற்கு, காரைநகர் கிழக்கு, காரைநகர் தென் மேற்கு, காரைநகர் வடக்கு, காரைநகர் வட கிழக்கு, காரைநகர் தெற்கு, காரைநகர் தென் கிழக்கு, காரைநகர் மத்தி, ஊர்காவற்றுறை, பருத்தி அடைப்பு, கரம்பன், கரம்பன் கிழக்கு, கரம்பன் தென் கிழக்கு, கரம்பன் மேற்கு, நாரந்தனை வடக்கு, நாரந்தனை வடக்கு, நாரந்தனை வடமேற்கு, நாரந்தனை தெற்கு, நாரந்தனை மத்தி, சுருவில், புளியங்கூடல் ஆகியன ஆகும்;

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் முன்னர் இருந்த நான்கு பிரிவுகள் தற்போது ஆறு ஆக அதிகரிக்கப்பட்டுள்ளன.

அவை நெடுந்தீவு மேற்கு, நெடுந்தீவு தெற்கு, நெடுந்தீவு மத்தி, நெடுந்தீவு மத்தி மேற்கு, நெடுந்தீவு கிழக்கு, நெடுந்தீவு மத்தி கிழக்கு ஆகியவையே ஆகும்; (க-16)

## மன்னாரில் இளைஞர் வெட்டிக் கொலை

மன்னார், ஆக: 30

மன்னார்விளையாட்டு மைதானத்துக்கு அருகே இளைஞன் ஒருவர் வெட்டியும், குத்தியும் கொலை செய்யப்பட்டார்.

கொலையுண்டவர் பனங்கட்டிக் கொட்டியைச் சேர்ந்த [illegible]யாஸ் சேகர் என அடையாளம் காணப்பட்டது. [ஒ-ரி]

## நல்லூரில் அம்புலன்ஸ் சேவை

யாழ்ப்பாணம், ஆக 30

நல்லூர் கந்தசாமி கோவிலில் கடமை ஆற்றும் செஞ்சிலுவை ஜோன்ஸ் முதலுதவிப் படையினர் அம்புலன்ஸ் சேவையையும் நடத்தி வருகின்றனர்;

இன்று தீர்த்தோற்சவம் வரை இந்த அம்புலன்ஸ் சேவை தொடர்ந்து இருக்கும்;

இதற்காக செஞ்சிலுவைச் சங்க அம்புலன்ஸ் ஒன்று பெறப்பட்டுள்ளது. (இ-த)

## வாசகர் திருமுகம்

### பல் நோயாளர் அவதி

மன்னார் மாவட்டத்தில் பேசாலை, மன்னார், முருங்கன் வைத்தியசாலைகளில் பற்சிகிச்சை நிலையங்கள் இருக்கின்றன:

ஆனால் மன்னார் வைத்தியசாலையில் ஒரு பல் வைத்தியரே இருக்கின்றார்; பேசாலை பற்சிகிச்சைநிலையத்தில் உள்ள பல் வைத்தியர் நீண்டகால பிரவச லீவில் (விடுமுறை இருக்கின்றார். முருங்கன் வைத்தியசாலை பொறுப்பதிகாரியும் பல் வைத்தியரே: ஆனால் அவர் பதவி உயர்வு பெற்று வேறு மாவட்டத்துக்குச் சென்று பல மாதங்களாகியும் அவரின் இடத்துக்கு வேறொருவர் நியமிக்கப்படவில்லை.

மன்னார் வைத்தியசாலையில் கடமை புரியும் வைத்தியர் விடுமுறையில் சென்றால் வேறு பதில் வைத்தியர் நியமிக்கப்படுவதில்லை;

நோயாளரின் கஷ்டத்தை நீக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

ஆர். ஜோர்ஜ்
மன்னார்.

### மருத்துவத் தாதிகள்

யாழ்ப்பாணம், வவுனியா சுகாதாரப் பிரிவுகளில் குடும்ப நல சேவையாளரின் (மருத்துவ தாதி) நாளாந்த வேலைநேரம், கடமை நேரம் என்ன என்பது சரியாகத் தெரியவில்லை. இடத்துக்கிடம் வேறுபட்ட நிலையில் பொறுப்பதிகாரிகளின் அட்டவணைப்படியே வேலை வழங்கப்படுகிறது.

குடும்பநல சேவையாளர் சில வைத்திய நிலையங்களில் வெளிக்கள மருத்துவ மாதினுடைய கிளினிக் சிகிச்சையும் செய்ய வேண்டியுள்ளது. எங்கள் மாவட்டங்களில் பெரும்பாலான வைத்தியசாலைகளில் ஒரேயொரு குடும்பநல சேவையாளரே 24 மணிநேரமும் கடமை புரிகின்றார். அத்துடன் ஒரு பதிவுபெற்ற வைத்தியர் கடமைபுரியும் வைத்தியசாலைகளில் ஒப்பந்தக்காரரிடம் உணவுப் பொருள்களைப் பாரம் எடுக்கும் வேலையும் அவர்கள் செய்ய வேண்டியுள்ளது.

எனவே மருத்துவத் தாதிகளுக்கு எல்லா இடங்களுக்கும் பொதுவான கடமை நேரத்தை நிர்ணயித்துக் கடமையை வரையறுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆவன செய்ய வேண்டும்.

அ. ரஹீம்
வவுனியா:

### வரட்சி நிவாரண முத்திரை

மன்னாரில் இம்மாத இறுதிக்குள் வரட்சிநிவாரண முத்திரையை வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஏ: கி ஜெபநாயகம் தெரிவித்தார் (க-ரி

## கண்டதும் கேட்டதும்

வவுனியாவில் ஒருபக்கம் ஆங்கிலத்தில் தட்டச்சுச் செய்ய 20 ரூபா முதல் 30 ரூபாவரை தேவைப்படுகிறது: ''டைப்ரைட்டர்'' வைத்து ஒரு சிலரே இங்கு தொழில் செய்வதால் இப்படிக் கிராக்கி போலும்!

யாழ்ப்பாணத்திலும் தட்டச்சு வியாபாரம் தாராளம்; அதேபோன்று தையல் மெஷின் வைத்து வியாபாரம் செய்வோரும் அதிகம்.

இரைக்கடைக்கும் எதிர்க்கடை தேவை என்ற பிரச்சினைக்கு இடமில்லாமல் யாழ். நவீன சந்தையின் விறாந்தைகளில் எல்லாம் தையல் மெஷின்கள் வைத்து வியாபாரம் தாராளமாக நடக்கிறது.

ஆனால் ஏட்டிக்குப் போட்டி இருந்தாலும் கட்டணமோ அதிகம்! கட்டணம் அதிகரிப்புக்குக் காரணம் இந்த தையல் மெஷின் வைத்திருப்போரிடம் அறவிடப்படும் உச்ச வாடகைதான் என்று காரணம் கூறப்படுகிறது:

தமது கடைக்கு முன்னால் அதாவது நவீன சந்தை விறாந்தையில் தையல் மெஷின் வைத்து வியாபாரம் செய்வதற்கு மாதம் 650 ரூபாவரை கடைக்காரர்கள் அறவிடுகிறார்களாம்:

தையல் மெஷின் காரர்களும் என்ன செய்வார்கள்? அதனைப் பொதுமக்களிடமிருந்து கறக்கிறார்களாக்கும்:

— செய்தி லோலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினமும் 1,700 பேர்வரை பாஸ்போட்டுக்கு விண்ணப்பம்

## ஆஸி, கனடா, அமெரிக்கா போவதிலேயே பலரும் நாட்டம்

கொழும்பு ஆக. 30 வெளி நாடு செல்வதற்காக தினமும் 1500 முதல் 1700 பேர்வரை பாஸ்போர்ட் பெறுவதற்கு விண்ணப்பங்களை சமர்ப்பிக்கின்றனர் என்று குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுகால வரை சராசரி 500 பேரே தினமும் பாஸ்போர்ட் கோரி விண்ணப்பங்கள் சமர்ப்பித்து வந்தனர்.

அவுஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்குச் செல்லவே பாஸ்போர்ட்டுகளுக்கு விண்ணப்பிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

### கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 30 காங்கேசன்துறை மார்பு நோய் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் கூட்டம் எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் என மேற்படி வைத்தியசாலை அதிகாரி தெரிவிக்கின்றார். (க)

அதே சமயம் காயமடைந்த பாதுகாப்புப் படை வீரர்களுக்கு வைத்திய சிகிச்சை எதுவும் அளிக்கக் கூடாது என்று ஜே. வி. பி. இயக்கம் உத்தரவிட்டிருப்பதாக ஏஜன்ஸிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசு டாக்டர்களுக்கும் இது சம்பந்தமாக எச்சரிக்கைக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இதனால் பல டாக்டர்கள் ஆஸ்பத்திரிகளுக்குச் செல்லத் தயக்கம் காட்டி வருகின்றனர். (இ - எ)

### துன்னாலை இளைஞன் காயம்

துன்னாலைப் பகுதியில் கடந்த சனிக்கிழமை ஷெல் வீச்சுகளும் துப்பாக்கிவேட்டுச் சத்தங்களும் கேட்டன.

இச்சம்பவத்தில் துன்னாலையைச் சேர்ந்த ரீ. சசிகரன் (வயது 18) காயமடைந்தார்.

அதேதினம் இரவு புலோலிப் பகுதியிலும் வேட்டுச் சத்தங்களும் ஷெல் வீச்சுச்சத்தங்களும் கேட்டன. (ஓ-70)

முகாமுக்குச் செல்வோர்

# கடிதமோ, பொருளோ எடுத்துச் செல்ல முடியாது

## செஞ்சிலுவை சங்கத்துக்கு அறிவிப்பு

யாழ்பாணம், ஆக 29 'அமைதிப்படை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை பார்க்கச் செல்பவர்கள் கடிதங்களோ வேறு பொருட்களோ கொண்டு செல்ல முடியாது' என்று அமைதிப் படையினர் அறிவித்துள்ளனர்.

அமைதிப்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களைப் பார்வையிடுவது தொடர்பாக யாழ் செஞ்சிலுவைச் சங்கத்துக்கு அமைதிப் படை உயரதிகாரி கடந்த வாரம் அனுப்பியுள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அமைதிப்படையினர் தெரிவித்துள்ள மற்றைய விடயங்கள் வருமாறு:-

★ உணவுப் பொருள் எதனையும் வழங்க முடியாது.

★ தடுத்து வைக்கப்பட்டுள்ளோரை ஒவ்வொருவராகச் சென்று பார்க்கவேண்டும்.

★ ஒரு வாரத்தில் ஒரு தடவை மட்டும் ஒருவரைப் பார்க்க அனுமதிக்கப்படும்.

இதற்கிடையில் ஆரம்பத்தில் சகலரும் தடுத்து வைக்கப்பட்டவர்களைப் பார்க்க உணவுப்பொருள்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர். பின்பு சொற்ப காலம் உணவு கொடுக்கவோ அவர்களைப் பார்க்கவோ அனுமதிக்கவில்லை; சில வாரத்துக்கு முன்பு அவர்களைப் பார்க்க அனுமதித்தனர். ஆனால் மேற்கண்ட புதிய கட்டுப்பாடுகளை அவர்கள் நடைமுறைப்படுத்துவதாக அறிவித்துள்ளனர். (அ-3)

# தீவக மக்களே பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள்

'தமிழ்பேசும் மக்களின் விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த காலம்தொட்டு தீவுப் பகுதி மக்களே சகல வகைகளிலும் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள். ஏனைய பகுதிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது அடிப்படை வசதிகளிலும், தேவைகளிலும் மிகவும் பின் தங்கியுள்ள தீவுப்பகுதி மக்கள், இலங்கை அரசின் கடற்படையினரின் கெடுபிடிகளுக்கு அடிக்கடி ஆளாகவேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளனர்.

ஈழமக்கள்புரட்சிகரவிடுதலை முன்னணியின் தீவுப்பகுதி பொறுப்பாளர் திரு. கே. லெனின் சரவணை விவசாயிகள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையில் இப்படிக் கூறினார்.

இக் கூட்டம் சரவணை மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

திரு. லெனின் தொடர்ந்து பேசுகையில்:

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின்னால் கடற்படையினர் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டு இருந்தமையால், இப்பகுதி மக்கள் எவ்வித பயமும் இன்றி தொழிலை மேற்கொள்ளவும், கடல்வழியாக பிரயாணம் செய்வதற்கும் முடிந்தது. ஆனால் இன்று கடற்றொழிலாளர் மீண்டும் கடற்படையினர் துன்புறுத்தும் சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன. ஆகவே தமிழ்பேசும் மக்களாகிய நாம் தொடர்ந்தும் இன்னலகளை அனுபவியாது எமது தலைவிதியை நாமே தீர்மானிக்கவேண்டிய காலகட்டம் வந்துவிட்டது'.

''இலங்கை அரசுக்கும், இந்திய அரசுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் முடிவுகளை அறிவதில் தமிழ் பேசும் மக்கள் ஆர்வம் காட்டும் அதே சமயம், வடக்கு கிழக்கு மாகாண அரசுக்குப் பூரண அதிகாரம் வழங்குவதின் அவசியத்தையும், எமது பிரதேசசத்தினதும் மக்களினதும் பாதுகாப்பை மாகாண அரசு உத்தரவாதப் படுத்த கூடிய அளவிற்கு அதிகாரங்கள் பரவலாக்கப்படுவதின் தேவையையும்நாம் உணர்ந்து கொள்ள வேண்டும் என்றார்.

இக் கூட்டத்தில் ஈ.பி.ஆர் எல். எவ் இன் தீவகமக்கள் தொடர்பாளர் திரு. எஸ். மோகன் ஈழத் தொழிற்சங்க சம்மேளனத்தின் பிரதிநிதி திரு. கே. மாறன் உட்பட பலர் பேசினார்கள்.

---

## ஓராண்டு நினைவஞ்சலி



திரு. தம்பு குணரத்தினம்
(Retired Inspector of Police)

தோற்றம்: 01 - 07 - 1935
மறைவு: 30 - 08 - 1988

அன்பின் சிகரமாய்
பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் திருவுருவாய்
எம்மை எல்லாம் வளர்த்து ஆளாக்கி
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத்தெய்வமே!
நீர் எம்மைவிட்டு மறைந்து ஓராண்டு சென்றாலும்
ஒரு கணமும் உம் நினைவு எம் நெஞ்சைவிட்டு அகலாது.
உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவுத்துயரால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்.

வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை. (1741)

---

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 24 - 07 - 1913
இறைவன் அடியில்: 29 - 08 - 1981
திதி: 30 - 08 - 1989

அமரர்
டாக்டர் சின்னப்பு சின்னையா (R.M.P.)

எங்கள் குடும்ப ஒளிவிளக்காய்ப் பிரகாசித்து மனித குலத்தின் மதிப்பிடமாயும் எம் குலத்தின் வழிகாட்டியாயும் திகழ்ந்த தெய்வமே! வெள்ளி மறைந்தது போல் மறைந்து எங்களை ஆறாத்துயரில் விட்ட தந்தையே! நீங்கள் இறைவனடியில் மறைந்திருந்தாலும் எங்கள் உள்ளத்தில் என்றும் வாழ்ந்திருப்பீர்கள்! ஐயா!! உங்கள் ஆன்மா சாந்தியடைய நல்லைக் கந்தனின் தீர்த்தோற்சவமான இன்று பிரார்த்திக்கும்

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

களபூமி,
காரைநகர். (1778)

---

## 45 ஆவது நாள் நினைவலைகள்



சிவப்பிரகாசம் வைகுந்தவாசன்
(பவுண், வாசன்)

பிறப்பு: 27 - 11 - 1965
இறப்பு: 17 07 1989

காலம் கடந்தாலும்
நேரம் கழிந்தாலும்
எங்கள் பாசமிகு வாசனின்
நேசம் அழிந்திடுமா?

எங்கள் வாசனின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் சகல வழிகளிலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது நன்றி.

பெற்றோர், சகோதரர்கள், சகோதரிகள்,
மாமன்மார், மாமிமார்,
சித்திமார், சித்தப்பாமார் மற்றும்
உறவினர்கள், நண்பர்கள்.

புலோப்பளை,
பளை. [1772]

---


Palmposha



Nutritious Meal for the Family

INGREDIENTS: BLACK GRAM, CORN, GREEN GRAM, RICE, SOYA, MILK & SUGAR

METHOD: MIX PALMPOSHA WITH THE SUFFICIENT QUANTITY OF HOT MILK OR WATER TO THE REQUIRED CONSISTENCY. IF NECESSARY ADD SUGAR TO TASTE

NETT WT 500g

PRODUCT OF PALMYRAH DEVELOPMENT BOARD SRI LANKA

'பாம் போஷா'

பனை அபிவிருத்திச் சபை தயாரித்து வழங்கும் தரமான சத்துணவு

சகல "கற்பகம்" விற்பனை நிலையங்கள் மூலமும் விற்பனை செய்யப்படுகின்றன.

வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

தொடர்பு —

தலைமை அலுவலகம்,
பனை அபிவிருத்திச் சபை,
இல. 47, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-3302]


---

## கேள்வி அறிவித்தல்

### பிரதேச கல்வித் திணைக்களம், கிளிநொச்சி.

**கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சு வடக்கு கிழக்கு மாகாணம் கல்விப் புனருத்தாரணத் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் கட்டிட வேலைகள் செய்தல்**

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் கிளிநொச்சிப் பிரதேசக் கல்வித் திணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவரால் 1989 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 08 ஆம் திகதி (1989-09 08) முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கும் அதன் எதிரே உள்ள தொகைக்கு அல்லது அதனினும் கூடிய தொகைக்கு கட்டிட வேலை செய்வதற்கென கல்வித் திணைக்களம், கட்டுவேலைத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கட்டிடத் திணைக்களம் ஆகிய ஏதாவதொரு திணைக்களத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு 1989 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 08 ஆம் திகதி (1989-09-08) பிற்பகல் 2.00 மணிவரை மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணமாக (ரூபா 50) ரூபா ஐம்பதும் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக (ரூபா 250/-) ரூபா இருநூற்றி ஐம்பதும் செலுத்தியதின் பேரில் கேள்விப்பத்திரங்கள் கிளிநொச்சிக் கல்வித் திணைக்களத்தில் வழங்கப்படும். கேள்விப் பத்திரப் பணம் கேள்வி வைப்புப் பணம் ஆகியன கல்வித் திணைக்களத்தில் செலுத்தப்பட வேண்டும். கேள்விகள் 1989 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13 ஆம் திகதி (1989-09-13) காலை 11 மணிக்குக் கிளிநொச்சிக் கல்வித் திணைக்களத்தில் திறக்கப்படும்; அச்சமயம் கேள்விகாரர் சமுகமளிக்கலாம்.

தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் அதுபற்றி அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் ஒப்பந்தம் கைச்சாத்திடல் வேண்டும். தவறின் மறு அறிவித்தலின்றித் தெரிவு ரத்துச் செய்யப்படும்.

கேள்விப்பத்திரங்களுடன் இணைந்து வழங்கப்படும் வேலைக்கான கால அட்டவணைப்படியும் ஒப்பந்தப் பிரமாணங்கள் படியும் தவறாது வேலையைப் பூர்த்தி செய்து தரக்கூடியவர்கள் மட்டும் இவ் வேலைக்கு விண்ணப்பிக்கலாம்.

மேலதிக விபரங்கள் பிரதேசக் கல்வித் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

க. கந்தசாமி
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
கிளிநொச்சி.

பிரதேசக் கல்வித் திணைக்களம்,
கிளிநொச்சி.
23-08-89.

| பாடசாலையின் பெயர் | வேலை விபரம் | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை |
|---|---|---|
| கிளி/முழங்காவில் [illegible] முழங்காவில் | 40'/20' நீளமான [illegible] கட்டிடம் அமைத்தல் | ரூபா 300,000/- |
| கிளி/கிளிநொச்சி கனிஷ்ட வித்தி | மேற்படி | ரூபா 300,000/- |

[சி-3250]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியை அழைப்பும்



திரு. இராசமாணிக்கம் நடராசா
(இளைப்பாறிய தபால் அதிபர்)

மண்ணில் மலர்வு: 12-02-1927
விண்ணில் உயர்வு: 02-08-1989

விநாயக முதலியார் வீதி பருத்தித்துறையை வசிப்பிடமாகக் கொண்ட இளைப்பாறிய தபாலதிபர் திரு. இ. நடராசா கடந்த 02-08-89 அன்று வல்வெட்டித்துறையில் அகால மரணமாகிவிட்டார். இவர் இளைப்பாறிய ஆசிரியை திருமதி யோகராணியின் அன்புக் கணவரும் செல்வி யோகராணியின் (ஆசிரியை-முருகானந்த மகாவித்தியாலயம் முரசுமோட்டை) செல்வி ஜெயராணியின் (பேராதனைப் பல்கலைக்கழகம்- பொறியியல் இறுதிஆண்டு) மற்றும் செல்வன் ரகுபதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரது அந்தியேட்டிக்கிரியைகள் எதிர்வரும் 01-09-89 வெள்ளிக்கிழமை தம்பியார் திரு. இராசமாணிக்கம் மகாலிங்கத்தின் இல்லத்தில் நடைபெறும். நேரில் வந்தும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் எமது துன்பத்தில் கலந்து கொண்டோருக்கு எமது நன்றிகள்.

தகவல்:
இ. மகாலிங்கம் (தம்பி)
திருமதி யோகராணி நடராசா (மனைவி)

முருகையன் கோவிலடி,
வல்வெட்டித்துறை. (1760)

★ திமிங்கிலத்திற்குப் பதில்

# மனித முடியில் இருந்து அமினோ அமிலம் உற்பத்தி

பாண்டிச்சேரி, ஆக. 29

மனித முடியில் இருந்து அமினோ அமிலங்களைத் தயாரிப்பதற்காக பாண்டிச்சேரியில் அபிஷேகப்பாக்கம் என்னுமிடத்தில் 24 கோடி ரூபா செலவில ஓர் ஆலை அமைக்கப்பட்டு வருகிறது.

ஜப்பானிய நிறுவனம் ஒன்றின் நிதி உதவியுடன் அமைக்கப்படும் இந்த ஆலையில் உற்பத்தியாகும் அமினோ அமிலங்கள் முழுவதும் ஏற்றுமதி செய்யப்படும்.

இந்த ஆலையில் L. Cystine, L. Tyrosine ஆகிய அமினோ அமிலப் பவுடரும் தயாரிக்கப்படும்.

வெளிநாடுகளில் மருந்துத் தொழில், உணவுப் பக்குவத் தொழில், அழகு சாதனத் தயாரிப்பு ஆகியவற்றில் இப்பொருள்கள் விரிவாகப் பயன்படுத்தப்படுகின்றன.

தற்போது திருப்பதியில் ஒரு நிறுவனம் மனித முடியில் இருந்து சிறு அளவில் L. Cystine தயாரித்து வருகிறது.

அபிஷேகப்பாக்கம் ஆலைக்கு ஓராண்டில் ஆயிரத்து 200 தொன் மனித முடி தேவைப்படும். இந்த முடியானது சிகை அலங்கரிப்பாளர் நிலையங்களில் இருந்து பெறப்படும்.

முன்னர் அமினோ அமிலங்களைத் தயாரிப்பதற்கான மூலப்பொருளை ஜப்பானியர் திமிங்கிலங்களிடமிருந்து பெற்று வந்தனர்.

ஆனால் திமிங்கிலங்களை வேட்டையாடுவதற்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து மனித முடி பயன்படுத்தப்படுகின்றது.

மனித முடியுடன் முதலில் ஹைட்ரோகுளோரிக் அமிலம் சேர்க்கப்படும்.

பிறகு அக்கரைசலில் கோஸ்டிக் சோடா போன்ற வேதியியல் பொருட்கள் சேர்க்கப்படும். இறுதியில் இக்கலவை வடிகட்டப்பட்டு மின்சார முறையில் உலர்த்தப்பட்டு நூற்றுக்கு நூறு சுத்தமான L. Cystine மற்றும் L. Tyrosine பெறப்படும்.

இறுதியில் மிஞ்சுகின்ற ஆலைக்கழிவு வீணாக்கப்படாமல் அதில் இருந்து 19 அமினோ அமிலங்கள் அடங்கி பவுடர் பெறப்படுகின்றது. (எ)

# ஆடம்பரக் கார் உற்பத்தியில் மீண்டும் சீனா ஈடுபடுகிறது!

பீகிங், ஆக 29

சீனாவில் ஆடம்பரக் கார் இறக்குமதி நிறுத்தப்படுகிறது.

ஆனால் உள்ளூரிலேயே ஆடம்பரக் கார் உற்பத்தியை மீண்டும் ஆரம்பிக்க சீன அரசு தீர்மானித்துள்ளது.

'ஹொங்கி' என்ற பெயருடைய ஆடம்பரக் கார் உற்பத்தியை சீனா முன்னர் நிறுத்தியிருந்தது. 'ஹொங்கி' என்பது சிவப்பு கொடி என்ற அர்த்தத்தைக் கொடுக்கிறது.

இந்த கார் உற்பத்தித் தொழிற்சாலை மீண்டும் இயங்கத் தொடங்கி உள்ளது.

வருகிற ஆக்டோபர் முதலாம் திகதி சீன மக்கள் குடியரசின் 40 ஆவது ஆண்டு தினம் வருகிறது.

அன்று முதல் தொகுதியாக 20 கார்கள் வெளிவரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

● காணமற் போன

# பாக். விமானத்தை தேடும் பணி தொடருகிறது!

இஸ்லாமபாத், ஆக 29

கடந்த வெள்ளிக்கிழமை 49 பேருடன் காணமற் போன பாகிஸ்தான் விமானத்தைத் தேடும்பணி இன்னும்தொடர்ந்தும்இடம்பெறுகிறது.

பாகிஸ்தான்விமானப்படையுடன் சேர்ந்து இந்திய விமானப்படையின் ஹெலிக்கொப்டர்கள் தேடும்பணியில் ஜம்மு-காஷ்மீர் மாநில மலைச்சாரலில் ஈடுபட்டன. (எ)

# அதிகாரப் போட்டியில் பெனாஸிர்-இஷாக்கான்; ஜனாதிபதிக்கு எதிர்க்கட்சிகளின் ஆதரவு!

கராச்சி, ஆக 29

பாகிஸ்தான் அரசுத் தலைமைப்பீடத்தில் அதிகாரப் போட்டி இடம்பெறுவதாக அறிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி குலாம் இஷாக் கானுக்கும் பிரதமர் பெனாஸிர் பூட்டோவிற்கும் இடையே இந்த அதிகாரப் போட்டி ஏற்பட்டுள்ளது.

அரசமைப்பு ரீதியில் யார் அதிகாரம் கூடியவர்கள் என்பதில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டுள்ளதாக அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆப்கன் பிரச்சினை, அணு சக்தி, போதைவஸ்து இந்தியாவுடனான உறவு ஆகியவை தொடர்பான கொள்கைகளில் பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இடையே தீவிரக் கருத்து வேறுபாடுகள் நிலவுவதாகக் கூறப்படுகிறது.

ஆப்கன் பிரச்சினைக்கு பேச்சுக்கள் மூலம் அரசியல் தீர்வு காணுவதையே பெனாஸிர் விரும்புகிறார்.

ஜனாதிபதியோ ஆப்கனுக்கு எதிரான கெரில்லா யுத்தத்தைத் தீவிரப்படுத்த வேண்டும் என்று கருதுகிறார்.

அரசமைப்புச் சட்ட ரீதியாக கூடுதல் அதிகாரங்கள் பிரதமரிலும் பார்க்க ஜனாதிபதிக்குத்தான் உண்டு என்பதை பாகிஸ்தானின் எதிர்க்கட்சிகள் ஆதரிக்கின்றன. (எ)

# இன உணர்வை கட்டுப்படுத்த கோர்பச்சேவ் நடவடிக்கை

மாஸ்கோ, ஆக. 29

பால்டிக் குடியரசுகளில் பரவி வரும் தேசிய உணர்வு கட்டுப்பாட்டை மீறும் நிலையை அடைந்திருப்பதாக மாஸ்கோவில் அறிவிக்கப்பட்டுள்ளது.

லித்துவேனியா குடியரசில் தேசிய இன உணர்வலைகள் தீவிரமாக இருப்பதாகவும் பதற்ற நிலை நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தணிக்குமுகமாக சோவியத் ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவ் தனது விடுமுறை வாசஸ்தலத்தில் இருந்து லித்துவேனியா குடியரசுத் தலைவருடன் தொலைபேசியில் பேசினார்.

இதனிடையில், மொல்டேவியா நாடாளுமன்றத்தில் ரஷ்ய மொழிக்குப் பதில் மொல்டேவிய மொழியை உத்தியோக மொழியாக்கும் சட்டம் நிறைவேற்றப்பட உள்ளது. (எ)

## இந்தியாவில் இன்று 'பந்த்'

புதுடில்லி, ஆக, 29

நாளை புதன்கிழமை பிரதமர் ராஜீவைப் பதவி விலகக் கோரி எதிர்க்கட்சிகள் அங்கம் வகிக்கும் தேசிய முன்னணி 'பாரத் பந்த்' இந்தியாவின் சகல மாநிலங்களிலும் நடத்துகிறது. (எ)

## சும்போடிய பிரச்சினை

பாரிஸ், ஆக 29

கம்போடியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் முயற்சி தோல்வி அடையும் கட்டத்துக்கு வந்து விட்டதாக அறிவிக்கப்பட்டது.

பாரிஸில் நடக்கும் இது தொடர்பான சர்வதேச மாநாட்டில் சகல தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வு காணப்படவில்லை என்று அறிவிக்கப்பட்டது. (எ)

# பிரேதப் பெட்டிக்குள் இருந்து ஒரு போராட்டம்

புதுடில்லி, ஆக. 29

கேரள மாநிலத்தைச் சேர்ந்த சமூக சேவையாளர் ஒருவர் விற்பனைவரியை ரத்துச் செய்யக் கோரி புதுவித போராட்டம் ஒன்றை நடத்தி வருகிறார்.

சிறுகைத் தொழில் அதிபராக இருந்த சி. ஓ. சங்கர் என்பவரே இதனை நடத்துகின்றார்.

விற்பனை வரியை ரத்துச் செய்யும்வரை பிரேதப் பெட்டிக்குள் சாகும்வரை உண்ணாவிரதம் ஆரம்பித்து இருக்கும் இவர், 1981 இல் மரத்தில் செய்யப்பட்ட சிலுவை ஒன்றில் ஒருநாள் முழுவதும் தொங்கியபடி போராட்டம் ஒன்றை நடத்தினர்.

பிரேதப்பெட்டி போராட்டம் புதுடில்லியின் மத்திய பகுதியில் உள்ள வித்தல்பாய்பட்டேல் இல்லத்தின் முன்னால் நடைபெறுகிறது. (எ)


## இளைஞர், விதவைகள், அநாதைகளுக்கான தொழில் வாய்ப்பு.

வடக்கு-கிழக்கு மாகாண அரசானது, உதவி எதுவும் இதுவரை பெறாத இளைஞர்கள், விதவைகள், அநாதைகள், இடம்பெயர்ந்த குழந்தைகள் ஆகியோருக்கான புனர் வாழ்வு பிரதான திட்டம் ஒன்றினைத் தயாரிக்க முனைந்துள்ளது.

இத்திட்டமானது தேவைப்படும்பட்சத்தில், வருமானம் தோற்றுவிக்கும் திட்டங்கள், சமூக அபிவிருத்தித்திட்டங்கள், தொழிற்பயிற்சி வசதிகள் என்பனவற்றையும் உள்ளடக்கும். அரச உத்தியோகத்தர்கள், கிராமிய தொண்டர் அமைப்புக்கள், சமூக சேவையாளர்கள் ஆகியோர் மூலம் ஒவ்வொரு கிராம சேவைப் பிரிவுகளுக்கான திட்டத்தினைத் தயாரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது, கிராம மட்டத்திலான திட்டங்களைத் தயாரித்தலில் உதவ ஆர்வமுள்ள கிராம மட்டத்திலான தொண்டர் நிறுவனங்கள், சமூக சேவை நிறுவனங்கள் தங்களுடைய பெயர்களையும், விலாசங்களையும் அந்தந்தப் பகுதி மாவட்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளருக்கோ அல்லது நேரடியாக எனக்கோ அனுப்பி வைக்கலாம், அத்துடன் மேற் கூறியவை தொடர்பான உங்களிடம் ஏதாவது திட்டங்கள் இருப்பினும் அவற்றையும் பிரேரணைகள் வடிவில் அனுப்பி வையுங்கள்.

(ஒப்பம்) செயலாளர்
திட்டமிடல், இளைஞர். விவகார மனிதவள அமைச்சு
வடக்கு - கிழக்கு மாகாணசபை அரசு,
திருகோணமலை,

(C/3305)


● தி. மு. க. அரசைக்கலைக்கும்

# இந்திரா காங்கிரஸ் கனவு பலிக்காது; முதலமைச்சா கருணாநிதி அறிவிப்பு!

நெல்லை, ஆக 29

வரும் நாடாளுமன்றத்தேர்தலில் தமிழ் நாட்டில் 30 தொகுதிகளில் தி மு க வெற்றி பெறுவது உறுதி.

வள்ளியூரில் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசுகையில் முதலமைச்சர்கருணாநிதி முன்கண்டவாறு சொன்னார்.

கலைஞர் மேலும் சொன்னதாவது:

நான் புதிதாக திடீர் என்று வந்தவன் அல்ல; இப்போது எல்லாம் திடீர் திடீர் என்று தோன்றுகிறார்கள். முதல் அமைச்சராக வரவேண்டும் என்கிறார்கள். அப்படி ஆகாவிட்டால் மக்களைச் சந்திக்க மாட்டேன் என்று கூறுகிறார்கள்.

இன்னும் இரண்டுமாத காலத்தில் நாடாளுமன்றத் தேர்தல் வரஇருக்கிறது.

இத்தேர்தலில் தமிழகத்தில் இந்திரா காங்கிரஸ் வெற்றி பெற்றால் மக்கள் ஆதரவு திமுகவுக்கு இல்லை என்று கூறி திமுக அரசைக் கலைக்கிறோம் என்று சொல்லிவிடலாம் என்று இங்குள்ளவர்கள் கனவு காணுகிறார்கள். புதுடில்லியில் இருப்பவர்களுக்கு அப்படி ஓர் எண்ணம் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆனால் தமிழ்நாட்டுக் காங்கிரஸார் அப்படி ஒரு முடிவை எடுத்து சட்டசபைத் தேர்தலில் யார் யார் நிற்கவேண்டும்? நாடாளுமன்றத்தில் யார் யார் என்பதற்கான விண்ணப்பங்களை வாங்கி வருகிறார்கள்.

நான் அவர்களுக்குச் சொல்லிவைக்க விரும்புகின்றேன். 'உங்கள் கனவு பலிக்காது தூங்காதீர்கள். தூக்கத்தில் கனவுகண்டு ஏங்காதீர்கள்' — இப்படி கருணாநிதி தெரிவித்தார். (எ)

# சியாச்சென் எமது பிரதேசம்; பாக். அமைச்சர் அறிவிப்பு!

இஸ்லாமபாத் ஆக. 29

எல்லைப்புறத்தில் உள்ள சியாச்சென் பனிப் பிரதேசத்தில் இந்தியத் துருப்புக்கள் நிலை கொண்டிருப்பது ஆக்கிரமிப்பாகும்.

இப்படி பாகிஸ்தான் பாதுகாப்பு இணை அமைச்சர்குலாம் சர்வார் சீமா தெரிவித்தார்.

சியாச்சென் பனிப்பிரதேசத்தில் நிலை கொண்டிருக்கிற பாகிஸ்தான் துருப்புக்கள் வெளியேறப் போவதில்லை.

எமது பிரதேசத்தில் நாம் இருக்கிறோம், எதற்காக நாம் வெளியேறவேண்டும்?

இந்தியாதான் எமது பிரதேசமான சியாச்செனை ஆக்கிரமித்துள்ளது.

இப்படி ஜெனரல் சீமா தெரிவித்தார். (எ)

# உயிர்க் கொல்லி நிமோனியா ஏற்படக் காளானே காரணமாம்!

## அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

எய்ட்ஸ் மற்றும் புற்று நோய்களை அதிகமாகத் தாக்கும் ஒருவகை உயிர்க்கொல்லி 'நிமோனியா' நோய்க்குக் காரணமாக இருப்பது ஒரு வித காளான் வகையே என்று கண்டறியப்பட்டுள்ளது.

இந்தவகை நிமோனியா பற்றி நீண்டகாலமாகப் பிடிபடாமல் இருந்துவந்த மர்மத்தை இந்தக் கண்டுபிடிப்பு தீர்த்து வைத்துள்ளது.

''நிமோஸிடிஸ் கரினியை நிமோனியா'' (Pneumocystis Carinii Pneumonia) என்னும் இந்தவகை நிமோனியா ஓர் உயிர்க்கொல்லி நோயாகும்.

நோய் எதிர்ப்புச்சக்தி குறைவாக உள்ளவர்களை இது எளிதில் தாக்கும்.

எய்ட்ஸ் நோயாளிகள், வேதி சிகிச்சைக்கு உட்பட்டிருக்கும் புற்றுநோயாளிகள் ஆகியோர் இந்நோயால் எளிதில் பாதிக்கப்படுகின்றனர்.

இந்த நிமோனியா நோய் ஏற்படக் காரணமாக இருக்கும் நுண்ணுயிர் (Microbe) 'நிமோசிஸ்டிஸ் கரினியை' எனப்படுகிறது.

இந்த நுண்ணுயிரானது மலேரியாக் காய்ச்சலுக்குக் காரணமாக இருக்கும் ஒட்டுண்ணியைப் போன்ற ஒற்றைச் செல் உயிரினமா? Protozoa], அல்லது 'ஈஸ்ட்' [Yeast] போன்ற ஒருகாளான் வகையா என்பது வெகுகாலமாகவே சர்ச்சைக்குரியதாக இருந்து வந்தது.

ஆனால் மரபியல் பற்றிய ஒரு புதிய கண்டுபிடிப்பு இந்த சர்ச்சையைத் தீர்த்துவைத்துள்ளது. இப்போது இது ஒரு காளான் வகையே என்று கண்டறியப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் கலிபோர்னியா, மேரிலாந்து, கொலராடோ ஆகிய இடங்களில் பணிபுரியும் விஞ்ஞானிகள் குழுவினர் இந்த ஆய்வுகளை நடத்தினர்.

ஆர். என். ஏ. ஆராய்ச்சி

செல்லில் உள்ள ஆர். என். ஏ. மூலக்கூறில் மரபுக் கூறுகளின் வரிசையை ஆராய்ந்ததில் இத் தகவல் தெரியவந்துள்ளது.

'ரிபோ நியூக்ளிக் அமிலம்' என்னும் ஆர். என். ஏ. மூலக்கூறானது, உயிரினத்தின் புரதங்களைத் தயாரிக்கும் கூறாகும்.

நுண்ணுயிர்கள் முதற்கொண்டு, மனித உடல் வரையில் எல்லா அமைப்புகளிலும் ஆர். என். ஏ. உள்ளது.

ஆனால் உயிரினங்களைப் பொருத்து இம் மூலக்கூற்றில் உள்ள 'ஜீன்' எனப்படும் மரபுக் கூறுகள் அமைந்திருக்கும் வரிசை வேறுபடுகிறது. இந்த இந்த மாறுபாடுகளை வைத்து விஞ்ஞானிகள் ஆய்வு நடத்தினர்.

'நிமோசிஸ்டிஸ் கரினியை' நுண்ணுயிரை ஆராய்ந்து பார்த்ததில், அதிலுள்ள ஆர். என். ஏ. வின் மரபுக் கூறுகளின் வரிசையானது ஈஸ்ட்டின் ஆர். என். ஏ. வையே அதிகமாக ஒத்திருந்ததைக் கண்டறிந்தனர்.

எனவே, இந்த நுண்ணுயிரும் ஈஸ்ட்டைப் போன்ற காளான் வகையைச் சேர்ந்ததே என்று அவர்கள் முடிவு கட்டினர்.

இந்தக் காளானால் ஏற்படக் கூடிய பாதிப்புகளைக் குணப்படுத்துவதற்குத் திறன் வாய்ந்த சிகிச்சை முறைகளையும் உருவாக்குவதற்கு இந்தக் கண்டுபிடிப்பு மிகவும் உதவும் என்று டாக்டர் ஜெப்ரி சி. எட்மன் (Dr. Jeffrey C. Edman) தலைமையிலான இந்த விஞ்ஞானிகள் குழு தெரிவித்துள்ளது.

இந்தக் காளானைச் சோதனைச் சாலையில் செயற்கையாக வளர்த்து அதனை ஆராய்ந்து அதனை எதிர்க்கக்கூடிய மருந்து வகைகளைக் கண்டுபிடிக்கும் பணியில் விஞ்ஞானிகள் இனிஈடுபடுவார்கள் என்று காளானால் உருவாகும் வியாதிகளின் நிபுணரான டாக்டர் டொனல்ட் ஆம்ஸ்ட்ராங் என்பவர் கருத்துத் தெரிவித்தார். இவர் நியூயார்க் நகரிலுள்ள ஸ்லோன் கெட்டரிங் புற்றுநோய் மருத்துவமனையைச் சேர்ந்தவராவார்.


# தரமான கலர்ப்படப் பிரதிகள்

அதி குறைந்த கட்டணத்தில்...
மிகக் குறுகிய காலத்தில்...

கலர்ப்படச் சுருள்
கழுவுதல்
முற்றிலும் இலவசம்



நவீன கம்பியூட்டர்
இயந்திரத்தில்
பிரதி செய்தல்
3 முதல் 5 நாட்களில்
விநியோகம்

ஷப்ருவை நாடுங்கள்:

ஷப்ரு
207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி எண்: 22073

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
★ தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
நெக்கட்டிவ் [Processing] செய்தல் இலவசம்
★ விற்பனை வர்ண நிழற்படச் சுருள்கள்
Kodak Fuji Konic.
Tudor Fort B/W
பெற்றுக் கொள்ள நாடுங்கள்.

# உதயன்

30 - 08 - 1989 புதன்கிழமை

எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதிகளை
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள
போட்டோ அல்பங்கள் இலவசம
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை ரத்துச் செய்க!

### பௌத்த காங்கிரஸ் வேண்டுகோள்

அரசமைப்புச் சட்டத்தின் 13ஆவது திருத்தத்தை ரத்துச் செய்யும்படி அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் அரசாங்கத்திற்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

13ஆவது திருத்தம் நாட்டின் ஒற்றையாட்சி அமைப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதாகவும், பௌத்த காங்கிரஸ் அரசுக்கு சுட்டிக் காட்டியுள்ளது.

பௌத்த காங்கிரஸின் 70ஆவது வருட நிறைவை ஒட்டி நடத்தப்பட்ட 67ஆவது கருத்தரங்கைத் தொடர்ந்து, அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஐந்து யோசனைகளில் இதுவும் ஒன்றாகும்.

அந்த யோசனைகள் வருமாறு:-

★ வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள சரித்திர, புதைபொருளாராய்ச்சி மற்றும் புராதன சின்னங்களை தேசிய நினைவுச் சின்னங்களாக பிரகடனப்படுத்தியதற்காக அரசுக்கு நன்றி கூறுவது.

★ இந்த நினைவுச் சின்னங்கள் அமைந்திருக்கும் பிரதேசங்களில் பௌத்த கலாசாரத்தைப் பாதுகாக்க கூடிய முறையில் பௌத்த குடியேற்றத் திட்டங்களை அரசு ஏற்படுத்த வேண்டும்.

★ யாழ்ப்பாணம் நாகவிகாரை போன்ற பௌத்த நிலையங்களை புனர்நிர்மாணம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், யாழ் நாகவிகாரைக்கு மீண்டும் பௌத்த பிக்குகள் சென்று பணிபுரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். (ஓ-எ)

## நல்லூரில் பெண்களிடம் நேற்றும் சங்கிலிகள் திருட்டு

யாழ்ப்பாணம், ஆக. 30

தேர்த்திருவிழா நாளான நேற்று நல்லூரில் இரு பெண்களின் சங்கிலிகள் திருடப்பட்டதாக உற்சவகால மாநகர சபை அலுவலகத்தில் புகார் செய்யப்பட்டது.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஒரு பெண்ணிடம் இருந்து மூன்று பவுண் சங்கிலியும், கொக்குவிலைச் சேர்ந்த ஒரு பெண்ணிடம் இருந்து இரண்டு பவுண் சங்கிலியும் கையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஒரு பெண்ணின் மோதிரமும் தவறிவிட்டதாகப் புகார் செய்யப்பட்டது.

கண்டெடுக்கப்பட்ட மூன்று கைக்கடிகாரங்கள் மாநகர சபை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டன. (ஓ 3)

வீதியில் அடி அழித்துவந்த

## இரு இளைஞர்கள் கடத்தப்பட்டனர்

கொழும்பு, ஆகஸ்ட் 30

கற்பிட்டியில் கடந்த சனிக்கிழமை இராணுவச் சீருடையில் சென்ற கோஷ்டி ஒன்று இரண்டு இளைஞர்களைக் கடத்திச் சென்றது என்று அறிவிக்கப்படுகிறது. (ஓ-எ)

## சாவகச்சேரியில் நிவாரணம்!

பச்சிலைப்பள்ளி, ஆகஸ்ட் 30

சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளையில் இன்றும் நாளையும் மீளக்குடியமர்தல் நிவாரணம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-117)

## மாநகர சபையின் புதிய ஆணையாளர்

மட்டக்களப்பு, ஆக 30

மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளராக திரு. வி. அருணகிரிநாதன் நியமனம் பெற்றுள்ளார்.

## யாழ் ஆஸ்பத்திரி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவருக்குப் பொருத்தப்பட்டது.

கண் மாற்றுச் சிகிச்சையின் பூரணப் பெறுபேறு சுமார் ஒரு மாதத்தின் பின்னரே தெரியவரும்.

ஏனைய இருவருக்குச் செய்யப்பட்ட கண் மாற்றுச் சிகிச்சை பற்றிய பெறுபேறுகள் தெரிய வருவதற்கும் இன்னும் சில வாரங்கள் செல்லும்.

அவற்றின் பிற்பாடே கண் மாற்றுச் சிகிச்சையை இங்கு பூரண வெற்றியுடன் செய்ய முடியுமா என்பது தெரிய வரும் என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-10)

## இலங்கை வங்கி கருமபீடம்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 30

நல்லூர் கந்தசுவாமி கோவிலில் இயங்கும் இலங்கை வங்கியின் விசேஷ கருமபீடம் நாளை வரையும் செயற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தீர்த்தத் திருவிழாவான இன்று வரையுமே கருமபீடம் செயற்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

பூங்காவனத் திருவிழாவான நாளை மாலை ஐந்து மணிக்கு அதிர்ஷ்டலாபச்சீட்டு மூலம் மூவர் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ 3)

## நெரிசலில் காயமுற்ற இருவர்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 30

நல்லூர் உற்சவத்தில் நேற்று கூடிய பக்தர்களின் நெரிசலில் அகப்பட்டு இருவர் காயமடைந்தனர். இவர்கள் யாழ் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

சனநெரிசலில் சிக்கிய சுழிபுரத்தைச் சேர்ந்த எஸ். ரகுநாதன் என்னும் 12 வயதுச் சிறுவன் கதவுக்குள் கையைக் கொடுத்து ஒரு விரல் நசிந்த நிலையில் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை தொண்டர்களால் முதலுதவிச் சிகிச்சை அளிக்கப்பட்டு யாழ் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

கொக்குவிலைச் சேர்ந்த 70 வயதுடைய இ. கனகம்மா என்னும் மூதாட்டி சனநெரிசலில் கீழே விழுந்ததில், காலில் பிரள்வு ஏற்பட்ட நிலையில் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை தொண்டர்களால் யாழ் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஓ-3)

## சீனன்வாடியில் குண்டு வெடித்து இருவர் பலி!

கொழும்பு, ஆகஸ்ட் 30

கடந்த சனிக்கிழமை சீனன்வாடியில் கிணறு ஒன்றின் அருகில் குண்டு ஒன்று வெடித்ததில் இரண்டு பேர் மரணமானார்கள்.

இதேவேளை இம்மாதம் 24ஆம் திகதி திருகோணமலையில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் ஐந்து பேர் கொல்லப்பட்டனர். (ஓ-எ)

## தகனக் கிரியைக்குச் சென்ற தொழிலாளி திரும்பவில்லை!

### பிணமாகக் கொண்டு வரப்பட்டார்

பண்டத்தரிப்பு ஆக 30

உறவினர்கள் தகனக் கிரியைக்காக மயானத்துக்குச் சென்றவர் வீடு திரும்பவில்லை: அவர் பிணமாக வீட்டுக்குக் கொண்டுவரப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சில்லாலை வடக்கில் இடம்பெற்றது.

சம்பவம் வருமாறு:-

66 வயதான மூதாட்டியைத் தகனம் செய்வதற்காக அனைவரும் சென்றனர், அப்போது துரை என்ற தொழிலாளியும் சென்றார்.

தகனக்கிரியைகள் முடிவுற்றன. திருவடிநிலைக் கடலில் சிலர் நீராடினர். துரையும் கடலில் இறங்கினார்.

எல்லோரும் ஆழக்கடலுக்குச் சென்று விட்டனர். துரை பயம் காரணமாக கரைப் பகுதியில் குளித்துக் கொண்டிருந்தார்.

பெரிய அலை ஒன்று கரையை நோக்கி வந்தது. பயத்தால் கரைக்கு வரமுற்பட்ட அவர் இடறி விழுந்துவிட்டார். என ஊகிக்கப்படுகிறது: ஆழ்கடலுக்கு நீந்தச் சென்றவர்கள் திரும்பிய போது துரை கடலில் மூழ்கி இறந்து மிதக்கக்காணப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-120)

## ரூபவாஹினி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றைய ரூபவாஹினி மாலை 6 30மணி தமிழ்ச்செய்தி அறிக்கையில் தமிழ்க் கொலை உச்சக் கட்டத்தை அடைந்தது.

கடந்த சில தினங்களாக செய்தி அறிக்கை வாசித்தவர்களின் சாதனைகளை எல்லாம் முறியடிக்கும் விதத்தில் நேற்றைய வாசிப்பு இருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

15 நிமிடநேரம் மட்டும் நீடித்த செய்தி அறிக்கையை வாசித்தவர் சொற்களைச் சரியாக வாசிக்கமுடியாதவராக, பிழையான சொற்பிரயோகங்களைப் பாவித்துவிட்டு மொத்தம் பத்துத் தடவைகள் 'மன்னிக்கவும்' என்று மன்னிப்புக் கேட்டார்.

ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் புதிய தகுதிவாய்ந்த அதிகாரி நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து சகல கூட்டுத்தாபன ஊழியர்களையும் மூன்று நாட்களுக்குள் வேலைக்குத் திரும்புமாறு இம்மாதம் 24 ஆம் திகதி தந்திமூலம் கேட்கப்பட்டது.

தமிழ் ஊழியர்கள் உட்படப் பலர் அதன்பின்னரும் வேலைக்குச் செல்லவில்லை: படை பொலிஸ் உத்தியோகத்தர்களே பல பணிகளையும் அங்கு செய்துவருகிறார்களாம். [அ-இ]

## தெற்கில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

காணப்படாத அளவுக்கு சிதைக்கப்பட்டிருந்தன என ஏஜன்சிச் செய்திகள் தெரிவித்தன.

### பழிவாங்கும் நடவடிக்கை

பாணந்துறையில் நேற்று முன்தினம் 18 வயது பெண் பொலிஸாரும் அவரது பெற்றோர், சகோதர, சகோதரிகளை இனந்தெரியாதோர் சுட்டுக் கொன்றதற்கு பழிவாங்கும் நடவடிக்கையே இந்த 17 பேரின் கொலை என்று கூறப்படுகின்றது.

ஆனால் பாதுகாப்பு அமைச்சுப் பேச்சாளர் இக்குற்றச்சாட்டை மறுத்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

★ சரந்தெனியா தொகுதியின் முன்னாள் எம். பி. திருமதி சீபாலி சேனுதிரா சுட்டுக் கொல்லப்பட்டார். இவர் ஐ. தே. க. உறுப்பினர் ஆவார்.

★ மனித உரிமை வழக்குகளில் ஆஜராகி வந்த இளம் சட்டத்தரணி காஞ்சனா அபயபாலா திங்கள் மாலை அவரது வீட்டில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்: அவரின் தந்தை படுகாயமடைந்தார்.

காஞ்சனா அபயபால சுமார் 500மனித உரிமை வழக்குகள், ஆட்கொணர்வு மனுக்கள் சார்பாக ஆஜராகி இருந்தார்.

கொழும்பு நகரில் இச்சம்பவம் இடம்பெற்றது. [ஓ-எ]

## சாவகச்சேரியை அதிர வைத்த குண்டுச்சத்தம்

பச்சிலைப்பள்ளி, ஆக. 30

சாவகச்சேரி நகர்பகுதியில் நேற்றுக் காலை அதிர வைக்கும் குண்டு வெடிப்பு சத்தம் கேட்டதை அடுத்து சந்தையில் நின்ற வியாபாரிகளும் பொதுமக்களும் நாலாபக்கமும் சிதறி ஓடினர்.

சிறிது நேரத்தில் வழமை நிலை திரும்பியது. (ஓ-117)

## காரைநகரில் தேடுதல்

காரைநகர், ஆக 30

காரைநகரில் நேற்று முன்தினம் தேடுதல் இடம்பெற்றது. அன்று காலை வலந்தலை முகாம் மீது கிரனெட் ஒன்று வீசப்பட்டதை அடுத்தே தேடுதல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

மேற்கு வீதியில் வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்படவில்லை மாலை 5 மணியளவில் வழமைநிலை திரும்பியது. (ஓ-78)

## அடையாள...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்படும்:

தமது அடையாளக் கார்ட்டில் வதிவிட மாற்றம் தொழில் மாற்றம், வேறு மாற்றங்கள் செய்ய நேர்ந்தால் தமது கிராம சேவை அதிகாரிகள் மூலம் ''ரோஸ்'' வர்ண மாதிரிப் பத்திரத்தை நிரப்பி ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு அனுப்பினால் புதிய அடையாளக் கார்ட்டுகளை தாமதமின்றிப் பெற்றுக் கொள்ளலாம் —என்று ஆட்பதிவுத் திணைக்கள அதிகாரி சொன்னார். (அ-எ)

## தேர்ப் பவனி..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரும் காட்சியைக் காண பக்தர்கள் அதிகாலை ஐந்துமணியில் இருந்து ஆலயத்தில் அலைமோதத் தொடங்கினர்:

தேர் வடம் பிடிக்க பக்தர்கள் முண்டியடித்ததை அவதானிக்க முடிந்தது:

சிறுவர் முதல் வயோதிபர் வரை வெளி வீதியில் பிரதட்டை செய்தும், பெண்கள் அடி அழித்தும் தம் நேர்த்திக் கடன்களைப் பூர்த்தி செய்தனர்.

300க்கும் மேற்பட்ட பக்தர்கள் ஆட்டக் காவடி எடுத்தும், 20க்கும் மேற்பட்டோர் பறவைக்காவடி, பால்காவடி எடுத்தும் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர்

ஆலயத்தில் பஜனைகளும் பக்தர்களின் அரோகரா கோஷங்களும் பக்திப்பரவசத்தை ஊட்டின. பக்கவாத்தியங்கள் சகிதம் அடியார்களின் பண்ணிசை ஒலித்தன:

நல்லை ஆதீனம் உட்பட பல இடங்களில் அன்னதானம் வழங்கப்பட்டது: (அ-8)

## போடோ இனக் கிளர்ச்சி இடைநிறுத்தம் என அறிவிப்பு

புதுடில்லி, ஆக 30

அஸாம் மாநிலத்தில் போடோலந்து நாடு கோரி ஆயுதக் கிளர்ச்சி நடத்தும் போடோ இன போராளி அமைப்பு தனது நடவடிக்கைகளை இடைநிறுத்தி வைக்கப் போவதாக அறிவித்துள்ளது:

புதுடில்லியில் நடந்த முத்தரப்புப் பேச்சுக்களின்போது இந்த உடன்பாடு ஏற்பட்டது:

போடோ பிரச்சினைக்கு அமைதி வழியில் நியாயமான தீர்வுகாண மாநில அரசுக்கு வாய்ப்பு அளிப்பதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டதாக போடோ இனத்தலைவர்கள் தெரிவித்தனர். (எ)

## மரண அறிவித்தல்கள்

### யோசவ் மரியநாயகம் செபஸ்தியாம்பிள்ளை

சில்லாலையைச் சேர்ந்த யோசவ் மரியநாயகம் செபஸ்தியாம்பிள்ளை (பொன்ராசா) 15. 8. 89 ல் Hamburg ஜேர்மனியில் காலமானார். இவர் நிர்மலா றதிக்காவின் அன்புக்கணவரும், ஒஸ்கார் சுசிலன், சச்சா சதீசன் ஆகிய மழலைச் செல்வங்களின் ஆசைத்தந்தையும், சில்லாலையைச் சேர்ந்த காலம் சென்ற அ. செபஸ்தியாம்பிள்ளை, திருமதி திரேசம்மா செபஸ்தியாம்பிள்ளை அவர்களின் அன்பு மகனும், திருமதி பவளம் பசில், திரு. அன்ரன் நாயகம், திருமதி பரிமளம் பிரான்சிஸ், திருமதி தரளம் பாலரட்ணம் (ஜேர்மனி) செல்விதயாளம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், அச்சுவேலியைச் சேர்ந்த திரு. திருமதி B, J. T அரியநாயகம் தம்பதிகளின் மருமகனுமாவார். அன்னாரின் நல்லடக்கம் 24.8.89 ந்திகதி Hamburg ஜேர்மனியில் நடைபெற்றது.

அன்னாரின் நல்வாழ்வுக்கு நன்றி கூறவும், ஆன்ம சாந்திக்காகவும் 31.8.89, வியாழக்கிழமை அச்சுவேலி புனித சூசையப்பர் தேவாலயத்தில் காலை 7 மணிக்கு இரங்கற் பலி ஒப்புக் கொடுக்கப்படும்: அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்,

தகவல்
குடும்பத்தினர்.
(1783)

### திருமதி வேலுப்பிள்ளை நாகமுத்து

உசனைப் பிறப்பிடமாகவும் கச்சாயை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நாகமுத்து 28-8-89 அன்று காலமாகிவிட்டார்: அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் மனைவியும், கந்தையா, சிதம்பரப்பிள்ளை நடராசா (உசன்) ஆகியோரின் சகோதரியும், பொன்னம்மா, நல்லம்மா, செல்வி திரவியநாயகம் வேலுப்பிள்ளை (அதிபர் இயக்கச்சி அ. த. க. பாடசாலை) ஆகியோரின் தாயாரும், கந்தராசா கமலாதேவி [ஜேர்மனி], கருணைராசா கமலேஸ்வரி (ஜேர்மனி), காலஞ்சென்ற யோகராசா; யோகரத்தினம், யோகநாதன் கமலாசனி [ஆசிரியை இராமநாதன் கல்லூரி], லோகநாதன் கமலறஞ்சிதம் [ஜேர்மனி], யோகேஸ்வரன், சோதிநாதன் கமலரதி (ஜேர்மனி) யோகேந்திரன் [ஜேர்மனி], யோககீதன் விமலராணி [ஜேர்மனி], கமலரூபி, மனோகரன் தேவராணி [ஜேர்மனி, அருளானந்தம் மகாராணி, பரமேஸ்வரன் மகாநிதி ஜேர்மனி ஆகியோரின் பேத்தியாரும், எழில் ரேணுகா, அபிராம், சுகிர்தா, உமாகரன், சாமினி, சஞ்சீவன் ஆகியோரின் பாட்டியுமாவார்;

அன்னாரின் ஈமக்கிரியைகள் 29—8—89 அன்று அவரின் இல்லத்தில் நடைபெற்று கச்சாய் மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெற்றது; இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்;

'ஸ்ரீரங்கம்'
கச்சாய்

தகவல்
Miss. T. வேலுப்பிள்ளை
[1847]

### திருமதி பிலிப்பு நல்லையா மரியம்மா

கொய்யாத்தோட்டம் பழைய பூங்கா வீதியைச் சேர்ந்த திருமதி பிலிப்பு நல்லையா மரியம்மா அவர்கள் 28—8—89இல் காலமாகிவிட்டார்: அன்னார் J. P. நல்லையாவின் (இளைப்பாறிய உப்பள பாதுகாவலர்) அன்பு மனைவியும், P. N. R. அமிர்தவாசகம் (கடற்றொழில் திணைக்களம்), திருமதி அருளம்மா செல்வத்தம்பு [தவமலர்]' P. N: சாவிஸ் [யாழ் மாநகர சபை]: P. N: அற்புதநாதர் ஆகியோரின் அருமைத் தாயாரும், திருமதி M. R. அமிர்தவாசகம் (ஆசிரியை சம்பத்திரிசியார் கல்லூரி], திரு. F. Y: செல்வத்தம்பு, திருமதி ஜோன் ஒவ் ஆர்க், திருமதி லலிதா இராஜேஸ்வரி ஆகியோரின் அருமை மாமியாரும், திரு J: செபஸ்தியாம்பிள்ளை. திருமதி அன்னம்மா அருளப்பு, திரு. ஜோ: பிரான்சிஸ் பிள்ளை, காலஞ்சென்ற திரு: J. அந்தோனிப்பிள்ளை ஆகியோரின் அருமைச் சகோதரியும், திரு. ஜோர்ஜ் ரவீந்திரன் [கனடா], ஜனிரின் சுரேந்திரா [ஈராக்], கவிரன் ரவீந்திரா, இந்திரன் விமலேந்திரா, மைதிலி, மீரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் 30—8—89 புதன்கிழமை காலை 8-30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக பரி கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்; இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்,

51 1/1 பழைய பூங்காவீதி,
யாழ்ப்பாணம்;

தகவல்
P. N. R. அமிர்தவாசகம்
(1911)

இலங்கை வங்கியின் பொன்விழா ஆண்டு
வாடிக்கையாளர்களுக்கு ஓர் நற்செய்தி!

யாழ்ப்பாணம் இலங்கை வங்கியின்
விசேட கருமபீடம் - நல்லூர்

நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த உற்சவத்தையொட்டி, அடியார்கள் நலன் கருதி யாழ்ப்பாணம் இலங்கை வங்கி, தனது விசேட கரும பீடமொன்றை 31 - 08 - 89 வரை நல்லூர் கந்தசுவாமி கோவில் நாவலர் மண்டபத்தில் திறந்துள்ளதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறார்கள்.

* சேமிப்பு சான்றிதழ் விற்பனை
* சாதாரண மற்றும் சிறுவர் சேமிப்புக் கணக்குகள் ஆரம்பம்
* வெளிநாட்டுக் காசோலைகளைப் பரிவர்த்தனைக்காக ஏற்றுக்கொள்ளல் ஆகிய சேவைகள் நடைபெறும்.

கருமபீடத்தில் கொள்முதல் செய்யப்படும் சான்றிதழ்களுக்கு அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு பூங்காவனத் திருவிழாவன்று மாலை 5.00 மணிக்கு ரூபா 1000, ரூபா 500, ரூபா 200 பெறுமதியான சான்றிதழ்கள் பரிசாக வழங்கப்படும்

இலங்கை வங்கி
(C/3308)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, ... இல் உள்ள அச்சகத்தில் 30-08-1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org